வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 17.03.2023 வெள்ளிக்கிழமை | இதழ் : 98 | பக்கங்கள் : 16



மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

## போசாக்கு இன்மையால் குழந்தை உயிரிழந்தது!

யாழிலேயே இந்த பரிதாபநிலை

வடமராட்சி, மார்ச் 17

வடமராட்சி கிழக்கில் போசாக்கு இன்மையால் குழந்தை உயிரிழந்தமை பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிய வந்துள்ளது. இது அந்தப் பகுதியில் பெரும் அதிர்வலையையும் சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

வடமராட்சி கிழக்கு - குடத்தனையை சேர்ந்த பிறந்து 52 நாட்களேயான குழந்தை ஒன்று மயக்கமுற்ற நிலையில் கடந்த

15

## வடக்கில் 200 சுகாதார ஊழியருக்கு ஓய்வூதியம் வழங்குவதில் சிக்கல்!

யாழ்ப்பாணம், மார்ச் 17

வடக்கு மாகாணத்தில் சுகாதாரத் துறையில் சேவையாற்றி ஓய்வு பெற்ற 200 ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

இவர்கள் 15 வருடங்களாக தன்னார்வ தொண்டர்களாக பணியாற்றியுள்ளனர். வடக்கு மாகாணத்தில் சேவையாற்றிய இவர்கள் கடந்த 2020 ஆம் ஆண்டு ஓய்வுபெற்றிருந்தனர். இந்நிலையில், இவர்கள் ஓய்வுபெற்று மூன்று ஆண்டுகள் நிறைவடைந்தும் ஓய்வூதியம் கிடைக்கப்பெறவில்லை. இவர்களில் சில ஊழியர்களுக்கு 45 வயதின் பின்னரே நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிய வருகின்றது.

ஓய்வூதியம் வழங்குவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் தேவை என்று கடந்த வருடம்

15

# தென்னிலங்கை நிராகரிக்கும் தீர்வு தமிழ் மக்களுக்கு நிரந்தர தீர்வாகாது!

### தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர

● '13'உம் தமிழர் பிரச்னைக்கு தீர்வல்லவாம்!



கொழும்பு, மார்ச் 17

**தென்னிலங்கை மக்களால் நிராகரிக்கப்படும் தீர்வு ஒருபோதும் தமிழ் மக்களுக்கு நிரந்தர தீர்வாக அமையாது என்று ஜே. வி. பி. என்று அறியப்பட்ட தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுர குமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.**

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலமாகவோ அல்லது அதனை மாற்றியமைப்பதன் மூலமாகவோ தமிழர் பிரச்னைகளுக்கு முழுமையான தீர்வை வழங்க முடியாது.

அனைத்து இன மக்களாலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய புதிய அரசமைப்பு உருவாக்கப்பட்டு அதன் மூலமே தமிழருக்கு நிரந்தரத் தீர்வு வழங்கப்பட வேண்டும்.

தென்னிலங்கை மக்களால் நிராகரிக்கப்படும் தீர்வு ஒருபோதும் தமிழருக்கு நிரந்தர தீர்வாக அமையாது.

15

## வாக்குச்சீட்டு அச்சிட நிதி கிடைக்கவில்லை!

அரச அச்சகம் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 17

நிதி கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டதால் தபால் மூல வாக்களிப்புக்கான வாக்குச்சீட்டுகளை அச்சிடும் பணி ஆரம்பிக்கப்படவில்லை. ஆகவே, எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் வாக்குச்சீட்டுகளை ஒப்படைக்க முடியாது என்று அரச அச்சகம் தேசிய தேர்தல் ஆணைக்குழுவுக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

அச்சக திணைக்களத் தலைவர் கங்கானி லியனகே நேற்று வியாழக்கிழமை இந்த அறிவிப்பை எழுத்து பூர்வமாக வெளியிட்டார்.

15

## தேர்தல்கள் நடைபெறுவதை ஐ. நா. உறுதி செய்யவேண்டும்!

வதிவிட பிரதிநிதியிடம் சஜித் சுட்டிக்காட்டு



கொழும்பு, மார்ச் 17

தேர்தல்கள் நடத்தப்படுவதன் மூலம் இலங்கை மக்களின் இறையாண்மை அதிகாரம் உறுதிப்படுத்தப்படுவதில் ஐக்கிய நாடுகள் சபையின் கூடுதல் ஈடுபாடு அவசியம் என்று தன்னை சந்தித்த இலங்கைக்கான ஐ. நாவின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட வதிவிடப் பிரதிநிதி அசுசா குபோடாவுடனான சந்திப்பில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டினார்.

எதிர்க்கட்சி தலைவர் பணிமனையில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற

15

## அரசாங்க சேவைகள் வழமைக்கு திரும்பின

கொழும்பு, மார்ச் 17


அரசாங்கத்தின் வரி கொள்கையை உடனடியாக திருத்துமாறு கோரி நேற்று முன்தினம் நாடளாவிய ரீதியில் பணிப் புறக்கணிப்பு இடம்பெற்றது. இந்நிலையில், நேற்று முன்தினம் மாலை அறிவித்தது போன்று வேலை நிறுத்தத்தை தற்காலிகமாகக் கைவிட்டு நேற்று தொழில்சங்கத்தினர் பணிகளுக்கு திரும்பியிருந்தனர்.

47 பிரதான

15

## '13' குறித்து மகாநாயக்கர்களுடன் பேசுவதற்காக காத்திருக்கிறோம்!

விக்னேஸ்வரன் எம். பி. தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 17

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது குறித்துப் பேசுவதற்காக மகா நாயக்க தேரர்களை சந்திக்க தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான க. வி. விக்னேஸ்வரன் தலைமையிலான குழு விருப்பம் வெளியிட்டு, அவர்களின் பதிலுக்காக காத்திருக்கின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் விக்னேஸ்வரன் எம். பி. தென்னிலங்கை ஊடகம் ஒன்றுக்கு அளித்த நேர்காணலில்,

"மகா நாயக்க தேரர்கள் உட்பட பௌத்த பிக்குகளின் கடும் எதிர்ப்பை தொடர்ந்து 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது குறித்து

15

## மத்திய வங்கியின் கருத்து மாற்றமே நாட்டை வங்குரோத்தில் தள்ளியது!

ஆளுநர் நந்தலால் வீரசிங்க

கொழும்பு, மார்ச் 17

நாடு வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்பட இரு முக்கிய காரணங்களை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க நேற்று வெளிப்படுத்தினார்.

இலங்கை மத்திய வங்கி சட்டமூலம்

15

## தொழில் சங்கத்தினரை சந்திக்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, மார்ச் 17

நேற்று முன்தினம் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட பிரதான தொழில் சங்கங்களின் பிரதிநிதிகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சந்தித்துப் பேசவுள்ளார்.

அடுத்த வார முற்பகுதியில் இந்தப் பேச்சு நடைபெறும் என்று ஜனாதிபதியின்

15

## இப்படியும் நடக்கிறது...!

ஒரு காட்டில் ஓர் இளைஞன் நடந்து போய்க்கொண்டிருந்தான். அவனுக்குப் பசியெடுத்தது. ஒரு மரத்தில் உயரத்தில் கனிந்த பழங்கள் இருப்பதைக் கண்டான். மரத்தின் மேல் சரசரவென்று ஏறி அவற்றில் சில பழங்களைப் பறித்துத் தின்றான். மிகக் கனிந்த வாசனையுள்ள பழங்கள் கிளைகளின் நுனியில் இருந்தன. அவற்றை எட்டிப் பறிக்கக் கிளையின் மேல் நகர்ந்து சென்றபோது அவனது பாரம் தாங்காமல் ஒரு கிளை முறிந்து விட்டது.

சட்டென்று சுதாகரித்த அவன் கீழே இருந்த ஒரு கிளையைப் பிடித்துக் கொண்டு தொங்க ஆரம்பித்தான். குனிந்து பார்த்தால் தரை வெகு கீழே இருந்தது. ஏற்கனவே பயந்து போயிருந்த அவன் மேலும் பயந்து கண்ணை மூடிக் கொண்டு "யாராவது காப்பாற்றுங்கள்" என்று திரும்பத் திரும்ப அலற ஆரம்பித்தான். உள்ளங்கை வியர்த்து வழுக்க ஆரம்பிக்கும் நிலை வந்து விட்டது.

தற்செயலாக அப்போது அந்தப் பக்கம் ஒரு முதியவர் வந்தார். மரத்தில் தொங்கிக் கொண்டிருந்தவனைப் பார்த்தார். அவன் மேல் ஒரு சிறிய கல்லை விட்டு எறிந்தார். கல் பட்டவுடன் வலியில் கீழே பார்த்தவனுக்கு ஆத்திரம் வந்தது. "பெரியவரே, உதவச் சொன்னால் கல்லால் அடிக்கிறீரே. அறிவில்லையா உமக்கு", என்று கோபத்துடன் கேட்டான்.

பெரியவர் பதில் பேசாமல் மற்றொரு சிறிய கல்லை எடுத்து அவன் மேல் எறிந்தார். மேலும் கோபமுற்ற இளைஞன் பெருமுயற்சி எடுத்து கையை வீசி மேலிருந்த கிளை ஒன்றை பலமாகப் பற்றிக் கொண்டு "நான் கீழே வந்தால் உம்மைச் சும்மா விட மாட்டேன்", என்று எச்சரித்தான்.

பெரியவர் மேலும் ஒரு கல்லை அவன் மேல் வீசினார். இளைஞன் இப்போது இன்னொரு பெருமுயற்சி எடுத்து கிளைமேல் ஏறி விட்டான். விடுவிடுவென இறங்கி வந்த அவன் நேராகப் பெரியவரிடம் வந்தான். அவரை சரமாரியாகத் திட்டினான். "ஏன் அப்படிச் செய்தீர்? உம்மை நான் உதவி தானே கேட்டேன்?", என்றான்.

பெரியவர் அமைதியாக சிரித்துக் கொண்டே "தம்பி.. நான் உனக்கு உதவிதான் செய்தேன்", என்றார். இளைஞன் திருதிருவென முழித்தான்.

பெரியவர் விளக்கினார் "நான் உன்னை முதலில் பார்த்த போது நீ பயத்தால் உறைந்து போயிருந்தாய். உன் மூளை வேலை செய்யவில்லை. நான் கல்லை விட்டு எறிந்ததும் பயம் மறைய ஆரம்பித்து நீ என்னை எப்படிப் பிடிப்பது என்று யோசிக்க ஆரம்பித்தாய். யோசிக்க ஆரம்பித்தவுடன் நீயாகவே உன்னைக் காப்பாற்றிக் கொண்டு கீழே இறங்கி விட்டாய். உன்னை உன்னாலேயே காப்பாற்றிக் கொள்ள முடியும் என்று உன் அறிவுக்கு முதலில் புலப்படவில்லை. உன் பயம் உன் கண்ணை மறைத்துக் கொண்டிருந்தது. அதிலிருந்து உன்னை நான் திசை திருப்பினேன்", என்று சொல்லி விட்டுத் தன் வழியே அவர் போய் விட்டார்.

அண்மைக்காலமாக தமிழரசு பற்றி இந்தப் பத்தியில் எழுதுவதைப் பார்த்த பலரும் ஏதோ தமிழரசை வேண்டுமென்றே விமர்சிப்பதாகவும் வேறு ஒரு கட்சிக்கு ஆதரவாகவே இதைச் செய்வதாவும் குறைபட்டுக்கொள்கின்றனர். நேற்று முன்தினம் சசிகலா ரவிராஜ் அவர்களின் முகநூல் பதிவு பற்றி குறிப்பிட்டிருந்தேன். அதில் அவர் மாமனிதர் ரவிராஜ் அவர்களின் மனைவிதானா என்று நான் எழுதியிருந்தைத் பார்த்துவிட்டு ஒருவர் அவருக்கு 'மாமனிதர்' விருது கொடுத்தவர் யார் என்று கேட்டு ஒரு குறுந்தகவல் அனுப்பியிருந்தார்.

இந்த உலகத்திலேயே 'மாமனிதர்' விருது கொடுத்தவர் ஒருவர்தான். அவரே அந்த விருதையும் ரவிராஜுக்கு கொடுத்தார் என்பது அவருக்கு தெரிந்திருக்கவில்லை என்றால் அதற்கு இந்த ஊர்க்குருவி என்ன செய்வது?.

தமிழரசு பற்றி அண்மைக்காலமாக நாம் எழுதிவருவது, அந்தப் பாரம்பரிய கட்சி தவறானவர்களின் கைகளுக்கு சென்றுவிடக்கூடாது என்பதால் மட்டுமே.

தமிழரசு பற்றி ஒருநாள் எழுதியதைப் படித்துவிட்டு தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி தலைவர் தோழர் சுகு தொலைபேசியில் தொடர்பு கொண்டு சொன்னார், 'தமிழரசின் தலைவர் அமிர்தலிங்கத்தின் வீடு எப்போதும் மக்களுக்காக திறந்தே இருக்கும். அப்படிப்பட்ட தலைவர்களால்தான், தமிழ்த் தேசியம் இன்றுவரை நிலைத்து நிற்கின்றது. ஆனால், இன்றுள்ள தலைவர்கள், சாமான்யர்கள் நெருங்க முடியாதவர்களாக அல்லவா இருக்கிறார்கள்' என்று.

அத்தகையவர்களிடம் கட்சி சென்றடைந்து விடக் கூடாது என்பதே இந்த ஊர்க்குருவியின் நோக்கமும். அதனால்தான் அந்தக் கட்சி பற்றி அடிக்கடி எழுதவேண்டி வருகின்றது.

எங்கள் முயற்சி எல்லாம் மேலே மரத்தில் தொங்கிக் கொண்டிருந்த இளைஞனை காப்பாற்ற அந்த வயோதிபர் எடுத்த முயற்சி போன்றது தான்.!

**- ஊர்க்குருவி**

# திருநர்களின் செயல்முறையை பொலிஸ் அங்கீகரிக்க வேண்டும்!

கொழும்பு, மார்ச் 17

*1978 அரசமைப்பின் 12.1* பிரிவின் கீழ் குறிப்பிட்டுள்ள படி சட்டத்தின் முன் அனைவரும் சமம் மற்றும் சட்டத்தால் சமமான பாதுகாப்பு என்ற அரசமைப்பு உத்தரவாதத்தை கருத்தில் கொள்வதுடன் பொலிஸ் அதிகாரிகள் பால்நிலை மாற்றம் கொண்டவர்களின் அடையாளம் மற்றும் செயல்முறையை அங்கீகரிக்க வேண்டும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வெவ்வேறு துறைகளில் உள்ள சகல பொலிஸ் உத்தியோகத்தர்களும் பால்நிலை மாற்றம் கொண்டவர்கள் மற்றும் பால்நிலை மாற்றம் கொண்டவர்களின் செயல்முறை பற்றி அறிந்திருக்க வேண்டுமென்பதுடன் யோக்யர்கட்டா கோட்பாடுகளில் பொதிந்துள்ள அவர்களின் உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை மதிக்க வேண்டும்.

பாலின அடையாளத்தின் அடிப்படையில் பால்நிலை மாற்றம் கொண்டவர்களுக்கு எதிராக பொலிஸ் உத்தியோகத்தர்கள் பாரபட்சம் காட்டலாகாது. இதனை பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடைப்பிடிக்கவில்லை என்றால் அது அரசமைப்பின் 12.2 உறுப்புரையை மீறுவதாக அமையும்.

பாலின அடையாளத்தின் காரணமாக பால்நிலை மாற்றம் கொண்டவர்கள் உடல்ரீதியான தாக்குதல்கள் வாய்மொழி துஷ்பிரயோகம் மிரட்டல் பிறவடிவங்களிலான வன்முறைகளை பொலிஸ் நிலையங்களில் சந்திக்கின்றனர் என இலங்கையின் மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பால்நிலை மாற்றம் கொண்டவர்களிடம் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தரக்குறைவான வார்த்தைகளை பிரயோகித்தால் அது அவர்களை மனிதாபிமானமற்ற முறையில் அல்லது மனோரீதியாக சித்திரவதை செய்வதாக அல்லது இழிவாக நடத்துவதாக கருதப்படவேண்டும் என தெரிவித்துள்ள மனித உரிமை ஆணைக்குழு இது அரசமைப்பின் உறுப்புரை *11* மற்றும் அமுலில் உள்ள பிறசட்டங்களையும் மீறுவதாக அமையும் எனவும் குறிப்பிட்டுள்ளது. (ஐ)

## 'வடக்கின் பெரும் போர்' ஒருநாள் போட்டி இன்று!

யாழ்ப்பாணம், மார்ச் 17

வடக்கின் பெரும் போர் என்று வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி - சென். ஜோன்ஸ் கல்லூரி அணிகள் மோதும் ஒருநாள் போட்டி இன்று வெள்ளிக்கிழமை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் இந்தப் போட்டி இரு அணிகளும் மோதும் 21ஆவது ஒருநாள் போட்டியாகும்.

முன்னதாக இந்த இரு கல்லூரிகளும் மோதிய 116ஆவது பெருந்துடுப்பாட்டப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி 9 விக்கெட்களால் வெற்றி பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# போராட்டங்களை எதிர்கொள்ள பொருட்கள் சேகரிக்கும் பொலிஸ்

கொழும்பு, மார்ச் 17

நாட்டின் தற்போதைய நிலவரத்தின் அடிப்படையில், மேல் மாகாணத்தில் இடம்பெறும் போராட்டங்களை ஒடுக்குவதற்கு கலவர எதிர்ப்பு உபகரணங்களை வழங்குமாறு பொலிஸ் தலைமையகம், நாட்டின் 12 பொலிஸ் பிரிவுகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் சஜீவ மெதவத்தவின் கையொப்பமிடப்பட்ட இந்தக் கடிதம் பொலிஸ் பிரிவுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையக தகவல் வட்டாரங்கள் தெரிவித்தன.

எரிவாயு முகமூடிகள், கலகக் கவசங்கள், பாதுகாப்பு தலைக் கவசங்கள் மற்றும் ரப்பர் தடிகள் வழங்குமாறு கோரப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையக வட்டாரங்கள் தெரிவித்தன.

அநுராதபுரம், மட்டக்களப்பு, எல்பிட்டிய, குருநாகல், மாத்தளை, பொலனறுவை, தங்கல்ல, கண்டி, கந்தளாய், நுவரெலியா, புத்தளம், திருகோணமலை ஆகிய பகுதிகளில் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் தலைமையக தகவல்கள் தெரிவித்தன. (அ)

## இராணுவ துப்பாக்கி திருட்டு; மேலும் இரண்டு பேர் சிக்கினர்

கொழும்பு, மார்ச் 17

பனாகொடை இராணுவ முகாமின் சிப்பாய் ஒருவரின் ரீ-56 ரக துப்பாக்கி மற்றும் 90 தோட்டாக்கள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் மேலும் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் மனித கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களை தடுக்கும் பிரிவினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முன்னாள் இராணுவ சிப்பாய் ஒருவரும், 36 வயதுடைய இராணுவ சார்ஜன்ட் ஒருவருமே இவ்வாறு கைதாகியுள்ளனர்.

கைதானவர்களிடம் இருந்து, ரீ-56 ரக துப்பாக்கி மற்றும் தோட்டாக்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

முன்னதாக, இந்த சம்பவம் தொடர்பில் பிக்கு ஒருவர் உள்ளிட்ட இருவர் கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 17

துணவி அ. மி. த. க. பாடசாலையின் "செயல்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு" இன்று வெள்ளிக்கிழமை மதியம் ஒரு மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் வைகுந்தநாதன் பிரதீபன் தலைமையில் நடக்கும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் (வழிகாட்டலும் ஆலோசனையும்) திருமதி பிறேமலொஜி சுதேஸ்குமார், அராலி சரஸ்வதி மகா வித்தியாலய ஓய்வு நிலை அதிபர் ந. சபாரட்ணசிங்கி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ)

## 'மகிடி கூத்து' தொடர்பான இணைய கலந்துரையாடல்!

யாழ்ப்பாணம், மார்ச் 17

நூலக நிறுவனத்தால் நிகழ்த்தப்படும் இணைய வழி நிகழ்ச்சித் தொடர் வரிசையில் 69ஆவது நிகழ்வாக 'மறைந்து போன ஒரு மகிடிக் கூத்து: ஆய்வும் அது சார் ஆவணப்படுத்தலும்' எனும் தலைப்பிலான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம் பெறும்.

இந்தக் கலந்துரையாடலை சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தில் கட்புல தொழில்நுட்பக் கலைகள் துறையின் தலைவர் கலாநிதி க. சிவரெத்தினம் நிகழ்த்தவுள்ளார்.

இந்த கலந்துரையாடலில் சூம் செயலி மூலமாக 81415584 070 என்ற எண்ணைப் பயன்படுத்தி இணைந்துகொள்ள முடியும். (ஐ)

Eelanadu
17.03.2023 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், பங்குனி 03

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

# தென்னிலங்கை ஊடகங்களின் தவறு?

வடக்கு, கிழக்கின் பிரச்னைகள் தொடர்பில் தென்னிலங்கை ஆங்கில மற்றும் சிங்கள ஊடகங்களில் இருப்பவர்களுக்கு போதிய புரிதல் இல்லையென்னும் ஒரு பார்வையுண்டு. ‘விடியவிடிய இராமாயாணம் விடிந்த பின்னர் இராமர் சீதைக்கு என்ன முறையாமென்று’ பேச்சுவழக்கில் கூறுவார்கள். இதேபோன்றுதான், தென்னிலங்கை ஊடகங்களின் பார்வையும். இப்போதும் தமிழர்களின் பிரச்னை தொடர்பில் தங்களுக்கு விளங்கவில்லையென்று கூறும் சிங்கள அரசியல்வாதிகள் இருக்கின்றனர்.

தென்னிலங்கை ஊடகங்களின் மனோபாவத்தை புரிந்துகொள்வதற்கு அண்மைக்காலமாக வெளிப்படுத்தப்பட்டுவரும் ஒரு விடயமே போதுமானது. அது ‘ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதமென்பது’ போன்றது. இப்போது, இலங்கை தமிழரசு கட்சியானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஓர் அங்கத்துவ கட்சியாக இல்லை. கூட்டமைப்பு தனியாக இயங்கி வருகின்றது. இந்த நிலையில், தென்னிலங்கை ஆங்கில பத்திரிகைகளின் செய்திகளிலும் அவற்றில் வெளிவரும் கட்டுரைகளிலும் – தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளராக சுமந்திரனே நோக்கப்படுகின்றார். சுமந்திரனின் கருத்துகளையே கூட்டமைப்பின் நிலைப்பாடாக ஆங்கில ஊடகங்கள் பதிவுசெய்கின்றன. தென்னிலங்கை ஊடகங்கள் தமிழ் அரசியல் சூழலை எந்தளவுக்குப் புரிந்து வைத்திருக்கின்றன – புரிந்துகொள்ள முயற்சிக்கின்றன என்பது இதன் மூலம் தெளிவாகின்றது.

இந்த விடயத்தையே சரியாக அறிந்துகொள்ளாத தென்னிலங்கை ஊடகங்கள் தமிழர் அரசியல் விவகாரங்களை எவ்வாறு புரிந்துகொள்ளப் போகின்றன? ஆரம்பத்தில் மேற்கு நாடுகளின் தூதரகங்களின் அணுகுமுறையும் அவ்வாறுதான் இருந்தது. சுமத்திரனின் கருத்துகளையே கூட்டமைப்பின் கருத்துகளாக நோக்கினர். ஒரு கட்டத்தில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கிடையிலான முரண்பாடுகளை அறிந்துகொண்ட பின்னரே அவர்களின் அணுகுமுறையில் மாற்றங்கள் ஏற்பட்டன.

தமிழ்த் தேசிய அரசியலில் ஏற்பட்ட உடைவை இராஜதந்திர தரப்புகளும் உற்றுநோக்கியிருக்கின்றனர். அண்மையில், இலங்கைக்கு வந்திருந்த அமெரிக்க இராஜாங்க செயலகத்தின் அரசியல் விவகாரங்களுக்கான கீழ் நிலை செயலர் விக்டோரியா நூலண்ட் தமிழ் பிரதிநிதிகளை சந்தித்தபோது, இந்த வேறுபாட்டை காணக்கூடியதாக இருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் தமிழரசு கட்சிக்கும் இடையிலான வேறுபாட்டை அமெரிக்கத் தூகரகம் புரிந்துகொண்டிருக்கின்றது. வழக்கத்துக்கு மாறாக, குறித்த சந்திப்புக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து டி. பி. எல். எவ். (புளொட்) தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் அழைக்கப்பட்டிருந்தார். தமிழரசு கட்சியிலிருந்து சுமந்திரன் அழைக்கப்பட்டிருந்தார். இந்த பின்புலத்தில் சுமந்திரன்தான் அனைத்தும் என்னும் பார்வை மாறியிருக்கின்றது. சம்பந்தன் செயல்படக்கூடிய நிலையிலிருந்த காலத்தில் சுமந்திரனுடன் பேசினால் போதுமானதென்னும் பார்வையே அமெரிக்க மற்றும் மேற்குலக இராஜதந்திரிகள் மத்தியிலிருந்தது.

ஆனால் இப்போதும், இந்த விடயம் ஆங்கில ஊடகங்களில் தவறாகவே புரிந்துகொள்ளப்படுகின்றது. ஆங்கில ஊடகங்கள் சுமந்திரனை கூட்டமைப்பின் பேச்சாளராக குறிப்பிடுவதும் அவரின் கருத்துகளை கூட்டமைப்பின் கருத்துகளாக முன்வைப்பதும் அடிப்படையிலேயே தவறானது. கூட்டமைப்பின் நிலைப்பாடுகளை அறிய வேண்டுமாயின், தற்போது கூட்டமைப்பின் தலைவர்களாக இருக்கின்ற சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், சுரேஷ் பிறேமச்சந்திரன், சிறீகாந்தா, ஜனநாயக போராளிகள் கட்சியை சேர்ந்தவர்களுடன்தான் தொடர்புகொள்ள வேண்டும். அவர்களின் கருத்துகளையே கூட்டமைப்பின் கருத்துகளாக முன்வைக்க வேண்டும். தமிழரசு கட்சியின் நிலைப்பாட்டை அறிய சுமந்திரனுடன்தான் தொடர்புகொள்ள வேண்டும். தற்போதையே சூழலில் தமிழரசு கட்சியின் தீர்மானங்கள் அனைத்தும் அவராலேயே முன்னெடுக்கப்படுகின்றன. ஒரு வகையில் சுமந்திரனே, தமிழரசு கட்சியின் நிழல் தலைவர். அந்த வகையில் சுமந்திரனின் கருத்துகளை தமிழரசு கட்சியின் கருத்தாக முன்வைப்பதில் தவறில்லை.

# நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் முஸ்லிமின் சமாதி என்பது தவறு

## சீ. வீ. கே. சிவஞானம் தெரிவிப்பு



*யாழ்ப்பாணம், மார்ச் 17*

*நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் இஸ்லாமிய பாபா ஒருவரின் சமாதி இருக்கிறது. இதனாலேயே அங்கு விளக்கு எரிக்கப்படுகிறது என்று கூறப்படும் கருத்து முழுமையாக தவறானது என்று தெரிவித்திருக்கிறார் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம்.*

*“நல்லூர் கந்தசுவாமி ஆலயம் அமைந்துள்ள இடத்தில் இஸ்லாமிய பாபா ஒருவரின் சமாதி இருக்கிறது. இதனால்தான் அங்கு விளக்கு எரிக்கப்படுகின்றது”, என்று டான் தமிழ் ஒளி தொலைக்காட்சியில் ஒளிபரப்பான ‘ஸ்பொட் லைற்’ நிகழ்ச்சியில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்தபோது வடக்கு மகாகாண சபை முன்னாள் உறுப்பினர் கே. சயந்தன் தெரிவித்திருந்தார்.*

*இதற்கு பதிலளிக்கும் விதமாகவே இலங்கை தமிழரசு கட்சியின் மூத்த துணைத் தலைவரும் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டவருமான சீ. வீ. கே. சிவஞானம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.*

*மேலும், நல்லூர் ஆலயத்தின் உள்ளே பாபாவின் சமாதி இருப்பதாகக் கூறப்படுவது தவறான கருத்து. நல்லூரின் அருகாக மேற்கு பகுதியில் முன்னைய காலத்தில் ஒரு சில குடும்பங்கள் இருந்தன. பின்னர் அவர்கள் இடம்பெயர்ந்து சோனகர் தெருவில் குடியேறினர்.*

*நல்லூரின் மேற்கு திசையில் இஸ்லாமியர்கள் வழிபாட்டில் ஈடுபட்டார்கள். ஆனால், அங்கு பாபாவின் சமாதி உள்ளது. அதற்காகவே விளக்கு எரிக்கப்படுகின்றது என்று கூறப்படுவது முழுமையாக தவறானது.*

*முன்னர், முஸ்லிம் குடும்பம் ஒன்று நல்லூரில் கற்பூரம் விற்கும் உரிமையை கொண்டிருந்தது. இதற்கு ஆலயம் அனுமதி வழங்கியிருந்தது. இப்போது, அந்தக் குடும்பம் இல்லை. 1950களிலும் நல்லூரின் மேற்கு பகுதியில் முஸ்லிம்கள் தமது தொழுகையை நடத்தினர். இதனை நான் நேரில் கண்டிருக்கிறேன். மற்றும்படி, அங்கு சமாதி இருக்கிறது. அதற்காகவே விளக்கு எரிக்கப்படுகிறது என்று கூறுவதெல்லாம் தவறானவை - என்றார்.*

*(ஐ)*

## ‘உறவு’ திரைப்படம் திரையிடல்

*யாழ்ப்பாணம், மார்ச் 17*

*கரவெட்டி திருவள்ளுவர் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் கனடா கவின் கலாலயாவின் தயாரிப்பில் திவ்வியராஜனின் இயக்கத்தில் உருவான ‘உறவு’ திரைப்படம் நாளை சனிக்கிழமை மாலை 6 மணியளவில் நுங்கோடை முருகன் ஆலய முன்றிலில் திரையிடப்படவுள்ளது.*

*ஈழம் மற்றும் புலம்பெயர் சூழலில் நன்கு அறியப்பட்ட கலைஞரும் எழுத்தாளருமான திவ்வியராஜன் ஏலவே ‘சகா’ என்ற திரைப்படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமானவர்.*

*திரைப்படக் காட்சியைத் தொடர்ந்து இடம்பெறவுள்ள கலந்துரையாலில் இயக்குநர் திவ்வியராஜனும் பங்கேற்பார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)*

## சர்வதேச பெண்கள் தினமும் கவிதை தொகுப்பு வெளியீடும்

*யாழ்ப்பாணம், மார்ச் 17*

*பெண் விடுதலை சிந்தனை அமைப்பின் ஏற்பாட்டில் சர்வதேச பெண்கள் தின கூட்டமும் கவிஞர் சி. சிவசேகரத்தின் பெண் விடுதலைக் கவிதைகளின் தொகுப்பான ‘கல்லாகவே ஆனாள்’ கவிதைத் தொகுப்பின் வெளியீட்டு நிகழ்வும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.*


*கே.கே.எஸ். வீதி கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையில் இடம்பெறும் இந்த நிகழ்வு, ‘பெண்களை ஒடுக்கும் இன்றைய பொருளாதார முறைமைக்கு எதிராக எழுவோம்!’ என்ற தொனிப்பொருளை முன்வைத்து இடம்பெறும்.*

*வலி. கிழக்கு பிரதேச சபை உறுப்பினரும் நாடகக் கலைஞருமான ச. நித்திகா தலைமையில் நடக்கும் இந்த நிகழ்வில், கருத்துரைகளை யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்லூரியின் பணிப்பாளர் கலாநிதி விஜிதா பகீரதன், சட்டத்தரணி ஆதித்தன் கார்த்திகா, சமூக செயல்பாட்டாளர்களான சத்திய மலர் இரவீந்திரன், வினுசன் ரேணுகா ஆகியோர் வழங்குவர்.*

*மேலும், விசேட கலை நிகழ்வுகளும், இரட்ணேஸ்வரி பால்ராஜ் மற்றும் நந்தமோகன் நவஓவியா ஆகியோரின் கவிதை பொழிவும் இடம்பெறவுள்ளன.*

*(ஐ)*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
தடைபட்டிருந்த வேலைகளில் கவனம் செலுத்துவீர். நீங்கள் ஈடுபடும் முயற்சி வெற்றியாகும். எதிர்பார்ப்பு நிறைவேறும் நாள். உங்கள் அணுகுமுறையால் நினைத்ததை அடைவீர். நெருக்கடி அகலும்.

**இடபம்**
முயற்சிகளில் கவனம் தேவை. எதிர்ப்புகளால் உங்கள் செயல் ஒன்று தள்ளிப்போகும். சந்திராஷ்டமம் தொடர்வதால் விழிப்புணர்வு அவசியம். சட்டரீதியாக சங்கடம் ஏற்படும். தடைகளை சந்திப்பீர்.

**மிதுனம்**
உங்கள் எதிர்பார்ப்பு நிறைவேறும். மனதிற்கினிய சம்பவம் நடைபெறும் நாள். உறவினர் ஆதரவால் நேற்றைய முயற்சி நிறைவேறும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். வருமானம் அதிகரிக்கும்.

**கடகம்**
மறைமுக சூழ்ச்சிகளை முறியடித்து உங்கள் செயலை செய்து வெற்றி காண்பீர். நீங்கள் மேற்கொள்ளும் முயற்சியில் முன்னேற்றம் காண்பீர்கள். வழக்கு ஒன்று சாதகமாகும். முயற்சி பலிக்கும்.

**சிம்மம்**
பூர்வீக சொத்துகளில் ஏற்பட்ட சிக்கலை பெரியோரின் ஆதரவுடன் பேசி தீர்ப்பீர்கள். உறவினர்களிடம் ஏற்பட்ட மனக்கசப்பு விலகும். விலகிச் சென்றவர்கள் மீண்டும் வருவார்கள். எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**கன்னி**
தாய்வழி உறவினர் ஆதரவால் உங்கள் முயற்சியில் லாபம் காண்பீர்கள். குல தெய்வத்தின் அருளால் குழந்தைக்கான நற்செய்தி தேடிவரும். குரு பகவான் அருளால் எண்ணம் நிறைவேறும்.

**துலாம்**
பிறரால் சில சங்கடத்தை சந்திப்பீர். எச்சரிக்கையுடன் செயல்படுங்கள். மற்றவர் செய்யும் தவறுக்கு நீங்கள் பதில் சொல்ல வேண்டிய நிலை வரலாம். வெற்றி காண்பீர்கள். நிதிநிலை உயரும்.

**விருட்சிகம்**
கொடுத்த வாக்கை நிறைவேற்றுவீர். புதிய முயற்சி இன்று வேண்டாம். பெரியோரின் ஆலோசனை நன்மையில் முடியும். பணிபுரியும் இடத்தில் உங்கள் ஆலோசனைக்கு மதிப்பு அதிகரிக்கும்.

**தனுசு**
உங்கள் மனம் தனிமையை விரும்பும். நீங்கள் ஈடுபடும் செயல்களில் குளறுபடி உண்டாகும். மற்றவர்களால் உங்களைப் புரிந்து கொள்ள முடியாமல் போகும். நிதானம் தேவை. முயற்சி நிறைவேறும்.

**மகரம்**
வரவை விட செலவு அதிகரிக்கும். கொடுக்கல் வாங்கலில் கவனம் அவசியம். நீங்கள் மேற்கொள்ளும் முயற்சி நிறைவேறும். எதிர்பார்ப்பு நிறைவேறாமல் போகும். விழிப்புணர்வு தேவை.

**கும்பம்**
முயற்சி வெற்றியாகும் நாள். நீங்கள் எதிர்பார்த்த பணம் வரும். புதிய முயற்சி இன்று வேண்டாம். வியாபாரத்தில் போட்டிகளை சமாளித்து லாபம் காண்பீர். நீங்கள் எதிர்பார்த்த பணம் வரும்.

**மீனம்**
உறவினருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு விலகும். உங்கள் முயற்சி வெற்றியாகும். தொழிலை விரிவு செய்ய திட்டமிடுவீர்கள். உங்கள் எதிர்பார்ப்பு நிறைவேறும். வியாபாரத்தில் இருந்த தடை விலகும்.

# இலங்கை தமிழர்களுக்கு வீடு மோடியின் மற்றொரு மைல்கல்!

## அண்ணாமலை பெருமிதம்

சென்னை, மார்ச் 17

இலங்கை தமிழர்களுக்கு தலா 28 இலட்சத்தில் (இந்திய) ரூபாய் 4 ஆயிரம் வீடுகள் கட்டித் தர அந்நாட்டு அரசுடன் மத்திய அரசு ஒப்பந்தம் செய்துள்ளது. இது பிரதமர் மோடியின் மைல்கல் நடவடிக்கை என்று தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை பெருமிதம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் ருவிற்றர் பதிவில் தெரிவித்தவை வருமாறு, சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவில் இருந்து இலங்கையில் குடியேறிய மலையகத் தமிழர்களின் வாழ்வாதாரம் முன்னேற, தலா ரூ. 28 இலட்சம் மதிப்பில் 4 ஆயிரம் வீடுகள் கட்டித் தருவ தற்கான ஒப்பந் தம் இரு நாட்டு அரசுகள் இடையே கையெழுத்தாகியுள்ளது.

இந்தியாவின் நாகரிக இரட்டை நாடான இலங்கையில் வசிக்கும் தமிழ் மக்களின் முன்னேற்றத்துக்காக பிரதமர் நரேந்திர மோடி தொடர்ச்சியாக முன்னெடுத்து வரும் நலத்திட்டப் பணிகளில் இது ஒரு மைல் கல் - என்றுள்ளது. (ஐ)

# தி. மு. க. கட்சியினர் மோதல் ஐவர் பொலிஸாரால் கைது!

திருச்சி, மார்ச் 17

திருச்சியில் அமைச்சர் கே. என். நேரு மற்றும் எம். பி திருச்சி சிவா ஆதரவாளர்கள் மோதிய விவகாரத்தில் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருச்சியில் ரென்னிஸ் விளையாட்டு மைதான திறப்பு விழா நடைபெற்றது. இதற்கான அழைப்பிதழில் தி. மு. கவின் எம். பி. திருச்சி சிவாவின் பெயர் புறக்கணிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இவ்விழாவில் அமைச்சர் கே. என். நேரு பங்கேற்றபோது, திருச்சி சிவாவின் ஆதரவாளர்கள், எதிர் முழக்கமிட்டனர் என்று தெரிகிறது. இதனால், கோபமடைந்த அமைச்சரின் ஆதரவாளர்கள், திருச்சி சிவா வீட்டுக்குச் சென்று கார் மற்றும் வீட்டின் யன்னல் உள்ளிட்டவற்றை சேதப்படுத்தினர்.

இதனைத் தொடர்ந்து இரு தரப்பினர் இடையேயும் பொலிஸ் நிலையத்திலும் மோதல் ஏற்பட்டது. இந்த மோதலின் எதிரொலியாக, தி. மு. க. தலைமை செயல்குழு உறுப்பினர், மாவட்ட துணை செயலாளர், மாவட்ட பொருளாளர் என நால்வரை கட்சியில் இருந்து இடைநீக்கம் செய்து தி. மு. க. பொதுச்செயலாளர் துரைமுருகன் உத்தரவிட்டார்.

தி. மு. கவின் இரு தரப்பு நிர்வாகிகள் இடையே மோதல் ஏற்பட்ட சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர்.

தாக்குதல் நடத்த வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்தமை, அரசு ஊழியரை பணி செய்ய விடாமல் தடுத்தல், சட்டவிரோதமாக கூட்டத்தை சேர்த்தல், கலவரத்தில் ஈடுபடுதல் உள்ளிட்ட 11 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்த பொலிஸார் கட்சியில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்ட தி. மு. க. நிர்வாகிகள் நால்வரையும் வேறு ஒருவரையும் கைது செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அ. தி. மு. க. தலைமை பதவிக்காக தேர்தல் நடத்தும் பணி ஆரம்பம்!

சென்னை, மார்ச் 17

அ. தி. மு. க. பொதுச்செயலாளர் தேர்தல் அறிவிப்பு விரைவில் வரும் என தகவல் வெளியாகியுள்ளது. தேர்தலுக்கான ஆயத்தப் பணிகளை மாநிலம் முழுவதும் எடப்பாடி பழனிசாமி தொடங்கியுள்ளார்.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு கட்சியின் உச்ச பதவியாக ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் பதவிகள் உருவாக்கப்பட்டன. ஒருங்கிணைப்பாளராக பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளராக பழனிசாமி ஆகியோர் பொறுப்பு வகித்து வந்தனர்.

2021 சட்டப்பேரவை தேர்தலின்போது முதல்வர் வேட்பாளர் அறிவிப்பிலும், தேர்தலுக்கு பின் எதிர்க்கட்சித் தலைவர் பொறுப்பை பெறுவதிலும் கடந்த ஆண்டு மாநிலங்களவை உறுப்பினர் நியமனத்திலும் பிரச்னைகள் எழுந்த நிலையில், கட்சிக்கு ஒற்றைத் தலைமைதான் சரியாக இருக்கும் என பழனிசாமி முடிவு செய்தார்.

நீண்ட சட்டப் போராட்டங்களுக்குப் பிறகு, கடந்த ஆண்டு ஜூலை 11ஆம் திகதி பொதுக்குழு கூட்டத்தை கூட்டி இடைக்கால பொதுச்செயலாளராக பழனிசாமி பொறுப்பேற்றார். இதைத் தொடர்ந்து, பன்னீர்செல்வம் மற்றும் அவரின் ஆதரவாளர்களை கட்சியில் இருந்து நீக்கினார்.

இதை எதிர்த்து பன்னீர்செல்வம் தரப்பில் உச்ச நீதிமன்றத்தை நாடியது. இதனிடையே, பழனிசாமி நடத்திய பொதுக்கூட்டம் செல்லும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதை எதிர்த்து பன்னீர்செல்வம் மேன்முறையீடு செய்துள்ளார்.

இதனிடையே, பொதுச் செயலாளருக்கான தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக தேர்தல் பணிமனைகள் அமைக்கும் பணிகள் நடைபெறுகின்றன. தலைமையின் அறிவுறுத்தல்படி கட்சியின் அனைத்து தொண்டர்களுக்கும் உறுப்பினர் அட்டை, வாக்கு சீட்டு வழங்கும் பணி ஆரம்பமாகியுள்ளது என்று கட்சியினர் தெரிவித்தனர்.

இதேசமயம், பொதுச் செயலாளருக்கான தேர்தலில் பழனிசாமி போட்டியின்றி வெற்றிபெற அதிக வாய்ப்புகள் உள்ளன. அவரைஎதிர்த்து யாரும் போட்டியிடப்போவதில்லை என நம்புகிறோம் என்றும் கட்சியினர் தெரிவித்தனர். (ஐ)

# கச்சதீவு அருகே மீன்பிடித்த தமிழக மீனவர் விரட்டியடிப்பு

சென்னை, மார்ச் 17

கச்சதீவு அருகே மீன்பிடித் நூற்றுக்கும் மேற்பட்ட தமிழக மீனவர்களை கடற்படையினர் விரட்டியடித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இராமேசுவரம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த மீனவர்களே இவ்வாறு விரட்டியடிக்கப்பட்டனர் என்று கூறப்பட்டது.

இவர்களில் ஒரு தரப்பினர் கச்சத்தீவு அருகே மீன் பிடித்து கொண்டிருந்தனர். அப்போது வழக்கம்போல் அங்கு ரோந்து வந்த இலங்கை கடற்படையினர் சர்வதேச கடல் பகுதியான இங்கு மீன்பிடிக்க அனுமதி இல்லை. எனவே, இங்கிருந்து புறப்பட்டு செல்லுங்கள் என எச்சரித்தனர். சில கடற்படையினர் மீனவர்களின் படகுகளில் ஏறி தாக்கி விரட்டியடித்தனர் என்று கூறப்படுகின்றது.

தொடர்ந்து, இந்த பகுதியில் மீன் பிடித்தால் விசைப்படகுகளுடன் சிறைபிடிக்கப்படுவீர்கள் என இலங்கை கடற்படை எச்சரித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. இவ்வாறு நூற்றுக்கும் மேற்பட்ட மீனவர்கள் கடற்படையினரால் விரட்டப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

# வரிவிதிப்பை செய்து பணவீக்கத்தை குறைப்பது நியாயமான செயலாகாது

## சுட்டிக்காட்டுகிறார் எதிர்க்கட்சித் தலைவர்

கொழும்பு, மார்ச் 17

**பதவிகள் மாறியதும் தீர்மானங்களிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

**கொழும்பு மஹர பிரதேசத்தில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.**



இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் - தற்போதைய ஜனாதிபதி, எதிர்க் கட்சி உறுப்பினராக இருந்தபோது, சர்வதேச நாணய நிதியத்துடன் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் உடன்படிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று அப்போது நிதி அமைச்சராக இருந்த பஸில் ராஜபக்ஷ விடம் கோரினார்.

எனினும் தற்போது ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியான பின்னரும்கூட சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களை மறைத்து வருகின்றார்.

தமது பதவிகள் மாறியதும் தீர்மானங்களிலும் மாற்றம் ஏற்பட்டுவிடுகின்றன.

சட்டமன்றம், நிறைவேற்று மற்றும் நீதித்துறை ஆகியவை இணைந்து செயற்பட்டாலும், நாட்டில் தற்போது சர்வாதிகார நிறைவேற்று அதிகாரமே ஆட்சி முறையிலுள்ளது.

அதன்மூலம் உயர்நீதிமன்றத்தையும் நீதிபதிகளையும் அவமதித்து மிதிக்கும் நிலைக்கு நாட்டின் ஆட்சியாளர்கள் வந்துள்ளனர்.

நீதிமன்றத் தீர்ப்புகளைக்கூட சவாலுக்கு உட்படுத்துவதன் மூலம் அரசியலமைப்பின் மூலம் வழங்கப்பட்ட மக்களின் வாக்குரிமைக்கு கூட சவால் விடுக்கப்படுகின்றது.

மக்கள் விரோத, மக்கள் எதிர்ப்பு, ஒடுக்கு முறைசார் இந்த அரசாங்கம், வரி விதித்து, பொருட்களின் விலையை உயர்த்தி மக்களின் கையில் இருக்கும் கடைசி விலங்கைக்கூட பறித்து, பொருளாதாரத்தைச் சுருக்குவதையே செயற்படுத்தி வருகின்றது.

நாட்டின் பொருளாதாரத்தை விருத்தி செய்து, மக்களின் கைகளில் பணம் செல்வதற்கான வழிகளை உருவாக்க வேண்டியது அவசியமாகும்.

வரிவிதிப்பினூடாக நாட்டின் பணவீக்கம் குறைவடைந்து நாடு இயல்பு நிலைக்கு திரும்பும் என்று நினைத்தாலும் அது உண்மையில் தவறான செயலாகும்.

நாட்டில் பொருட்களின் விலை அதிகரித்தால் அது ராஜபக்ச குடும்பத்திற்கோ அல்லது அவர்களது ஆதரவாளர்களுக்கோ பிரச்சினையாக அமையாது.

220 இலட்சம் மக்களுக்குமே அது பிரச்னையாக அமையும் - என்றார். (அ)

# மாவட்ட செயலகம் மூலம் மீனவர்களுக்கு உதவிகள்

கிளிநொச்சி, மார்ச் 17

கல்மடுக்குளத்தின் கீழ் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களின் வாழ்வாதார உதவி மாவட்ட செயலகம் ஊடாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கல்மடு குளத்தின் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பமாகியுள்ளன. இதனால் குறித்த குளத்தின் நீர் முழுமையாக திறந்து விடப்பட்டுள்ள நிலையில், நன்னீர் மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த குளத்தில் வாழ்வாதாரத்தை முன்னெடுத்துவரும் 75 அங்கத்தவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், நேற்று முன்தினம் அமைச்சருடன் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்திருந்தனர். குறித்த சந்திப்பில் கலந்துகொண்ட போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த சந்திப்பு நேற்று முன்தினம் பிற்பகல் 1 மணியளவில் தர்மபுரம் ஆறுமுகநாவலர் முன்பள்ளி வளாகத்தில் இடம்பெற்றது. இதன்போது தமது வாழ்வாதாரம் இழக்கப்பட்டுள்ள நிலையில், தமக்கு நிவாரணம் பெற்று தருமாறும், இரணைமடுக் குளத்தில் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு 25 பேருக்கு அனுமதி பெற்றுத் தருமாறும் இதன்போது அமைச்சரிடம் கோரிக்கை முன்வைத்தனர்.

அதற்கு பதிலளித்த அமைச்சர், குறித்த இரண்டு விடயங்களும் தொடர்பாக எனது கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது. 75 நன்னீர் மீனவர்களுக்கும் மாவட்ட செயலகம் ஊடாக நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

மேலும், முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக 25 பேருக்கு இரணைமடு குளத்தில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடுவது மற்றும் சங்கத்தை பதிவு செய்வது தொடர்பாக பேசி 2 வாரத்துக்குள் அறிவிப்பதாகவும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார். (அ)

# 2022 இல் பொருளாதாரம் 7.8 வீதம் சுருங்கியுள்ளது

கொழும்பு, மார்ச் 17

இலங்கையின் பொருளாதாரம் 2022 ஆம் ஆண்டில் முந்தைய ஆண்டை விட 7.8 வீதம் சுருங்கியுள்ளது என்று சனத்தொகை மதிப்பீடு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கடந்த ஆண்டின் நான்காவது காலாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 12.4 வீதம் சுருங்கியுள்ளதாக குறித்த புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும், உற்பத்திக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் கடந்த பெப்ரவரியில் 42.3 சுட்டெண் மதிப்பைப் பதிவு செய்துள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி இந்த ஆண்டில் 3 சதவீதத்தால் சுருங்கும் என எதிர்வு கூறியுள்ள மூடிஸ் முதலீட்டாளர்கள் சேவை, 2024 ஆம் ஆண்டில் அதன் வளர்ச்சி மீண்டும் உயரும் என்று எதிர்பார்க்கப்பதாகவும் கடந்த திங்கட்கிழமை தெரிவித்துள்ளது.

கோவிட்-19 தொற்றுநோயின் தாக்கம் மற்றும் தவறான பொருளாதார கொள்கை மற்றும் நிர்வாகம் என்பன கடந்த ஆண்டு தொடக்கத்தில் அத்தியாவசிய இறக்குமதிகளுக்கான அந்நிய செலாவணி பற்றாக்குறையை ஏற்படுத்தியது.

சர்வதேச நாணய நிதியத்தின் 2.9 பில்லியன் டாலர் பிணை எடுப்பு திட்டத்திற்கு எதிர்வரும் 20 அன்று இறுதி செய்யப்படும் என இலங்கை காத்திருக்கிறது.

"இந்த ஆண்டு முழுவதும், எதிர்பார்க்கப்படும் சர்வதேச நாணய நிதியத்தின் நிதிகளுடன், மத்திய வங்கி நாணயத்தை வலுப்படுத்தவும், இறுதியில் வட்டி வீதங்களைக் குறைக்கவும், பணவீக்கத்தை தொடர்ந்து குறைக்கவும் முடியுமென ஆசிய செக்யூரிட்டீஸ் நிறுவனத்தின் ஆய்வு பிரிவு சிரேஷ்ட உப தலைவர் சஞ்சீவ பெர்னாண்டோவை மேற்கோள் காட்டி ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது. (அ)

# இ.போ.ச பஸ் பயணத்துக்கும் இணையம் மூலம் ஆசன பதிவு

கொழும்பு, மார்ச் 17

இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ்களில் நீண்ட தூரப் பயணங்களுக்காக இணையத்தளம் வாயிலாக ஆசன முன்பதிவுகளை மேற்கொள்ளும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை நேற்று முன் தினம் முதல் அமுலுக்கு வரும் வகையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர் சிறிபால கம்லத் தெரிவித்தார்.

அத்துடன், sltb.express.lk என்ற இணையத்தளத்திற்குள் பிரவேசிப்பதன் வாயிலாக நெடுந்தூர பயணங்களுக்கான ஆசன முன்பதிவை மேற்கொள்ள முடியும்.

1315 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பதன் வாயிலாகவும் ஆசன முன்பதிவுகளை மேற்கொள்ள முடியும் என நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர் சிறிபால கம்லத் தெரிவித்தார். (அ)

# கடன் அட்டையை திருடி முக கிரீம் வாங்கிய நபர்!

கொழும்பு, மார்ச் 17

ஜா-எல பகுதியில் உள்ள விளையாட்டுக் கழகத்திற்கு சென்ற ஒருவரின் கடன் அட்டையைப் பயன்படுத்தி 20,000 ரூபா பெறுமதியான முகத்தை வெண்மையாக்கும் கிரீம் ஒன்றை கொள்வனவு செய்ததாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நபரை எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சம்பவத்தில் கைது செய்யப்பட்ட 42 வயதுடைய சந்தேக நபர், "எனது மனைவி வெள்ளையாக இருப்பதால் நானும் வெள்ளையாக இருக்கவேண்டும்" எனக் கூறி குறித்த கிரீமை கொள்வனவு செய்துள்ளதாக குருந்துவத்தை பொலிஸார் தெரிவித்தனர்.

விளையாட்டுக்கழகத்தின் மதுபானக் கடையில் பணியாளராகப் பணியாற்றிய ஜா-எல பிரதேசத்தைச் சேர்ந்த தினேஷ் உதயகுமார என்ற சந்தேகநபரே கைது செய்யப்பட்டார்.

முறைப்பாட்டாளர் கிளப்புக்கு வந்து பரிவர்த்தனை செய்து விட்டு வெளியேறியபோது, அவரது கிரெடிட் கார்ட் தொலைந்து போனதாகவும், சந்தேகநபர் அதனை பயன்படுத்தி குறித்த கிரீமை பெற்றுக் கொண்டதாகவும் பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்.

# வாகனங்களின் இறக்குமதி குறித்து மத்திய வங்கி ஆளுநருடன் ஆராய்வு

கொழும்பு, மார்ச் 17

வாகனங்களை மீள இறக்குமதி செய்வதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கி ஆளுநருடன் கலந்துரையாடல் இடம்பெற்றதாக இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் எதிர்காலத்தில் நிதி அமைச்சுடன் கலந்துரை யாடவுள்ளதாக அதன் தலைவர் சாந்த கமகே தெரிவித்தார்.

வாகன இறக்குமதி தொடர்பான தீர்மானங்களை தம்மால் மேற்கொள்ள முடியாது என மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித் தார். அதனை நிதியமைச்சே இறுதி செய்யவேண்டும்.

எனவே குறித்த செயற்பாடுகள் நிதியமைச்சின் ஊடாகவே நடை முறைப்படுத்தப்படும் என்பதால் எதிர்காலத்தில் நிதியமைச்சுடன் கலந்துரையாடவுள்ளதாக இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் சாந்த கமகே குறிப்பிட்டார். (அ)

# சுகாதாரப் பணியாளர்களுக்கு அமைச்சர் கெஹலிய பாராட்டு

கொழும்பு, மார்ச் 17

சுகாதார போராட்டத்துக்கு ஆதரவளிக்காத நோயாளர்களின் நலன்கருதி செயற்பட்ட சுகாதார சேவையாளர்களைப் பாராட்ட சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.



சுகாதார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் ஆலோசனைக் கமைய இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி, பணிப்புறக்கணிப்பின்போது கடமையில் இருந்த மருத்துவர்கள் முதல் சிற்றூழியர்கள் வரையான விவரங்கள் திரட்டப்படவுள்ளன. அதனை அடுத்து அவர்களுக்கான பாராட்டு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# மாணவர்களை ஏற்றாது செல்லும் பஸ்கள் மனித உரிமைகள் ஆணைக்குழு தலையீடு!

## இலங்கை போக்குவரத்துச் சபைக்கு கடிதம்

முல்லைத்தீவு, மார்ச் 17

**முல்லைத்தீவு மாவட்டத்தின் ஏ-9 வீதியில் உள்ள பனிக்கன்குளம், கிழவன்குளம் கிராமங்களின் பாடசாலை மாணவர்களை பஸ்கள் ஏற்றாமல் செல்கின்ற விடயம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இலங்கை போக்குவரத்துச் சபைக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.**

குறித்த விடயம் ஊடகங்கள் ஊடாக வெளிவந்ததன் அடிப்படையில் 1996/21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டம் பிரிவு 14 இன் பிரகாரம் ஆணைக்குழுவின் சொந்த பிரேரணையாக இந்த விடயத்தில் மனித உரிமைகள் ஆணைக்குழு தலையிட்டு குறித்த கடிதத்தை அனுப்பியுள்ளது

அந்தக் கடிதத்தில்-

“பேருந்துகள் ஏற்றாது செல்வதனால் வீதியில் அந்தரிக்கும் மாணவர்கள்” எனும் தலைப்பில் பத்திரிகைகளில் வெளிவந்த செய்தி தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய காரியாலயமானது 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 14 இன் பிரகாரம் ஆணைக்குழுவின் சொந்த பிரேரணையின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது.

குறித்த செய்திகளில் துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட மாங்குளம் மகாவித்தியாலயத்தில் கல்வி பயிலும் பனிக்கன்குளம் மற்றும் கிழவன்குளம் பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களை ஏ-9 வீதியில் பயணிக்கும் பேருந்துகள் ஏற்றாது சென்றதால் மாணவர்கள் பரீட்சைக்குச் செல்ல முடியாத நிலைமை தோன்றியுள்ளது. பரீட்சை நடைபெற்ற நாளான அன்று மாணவர்கள் தரிப்பிடத்தில் காத்திருந்தும் காலை 8.12 மணிவரை எந்தப் பேருந்துகளும் மாணவர்களை ஏற்றவில்லை. பின்னர் மாங்குளம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில் தரிப்பிடத்துக்கு விரைந்த பொலிஸார் அரச பேருந்து வருவதை அவதானித்து பேருந்தை மறித்த போது நடத்துநருக்கும் பொலிஸாருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்ட பின்னரே மாணவர்களை ஏற்றிச் சென்றதுடன், மாணவர்களுக்கு பருவகாலச் சிட்டை பெறுமாறு இ.போ.ச அதிகாரி களால் ஆலோசனை வழங்கப்பட்டதன் பிரகாரம் சிட்டை பெற்றும் எந்த வித முன்னேற்றமும் இல்லை. அதன் பின்னரே தம்மை பேருந்துகள் ஏற்றாமல் செல்வது அதிகரித்துள்ளது என்று மாணவர்கள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக அதிகாரிகள் பலருக்குத் தெரிவித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அத்தோடு வீதியை மறித்து போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

நீதிமன்றுக்கும் கொண்டு செல்லப்பட்டு வடமாகாண போக்குவரத்துப் பிரிவுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைவில் நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லையெனில் ஏ-9 வீதியை மூடிப் போராட்டத்தை முன்னெடுப்பதைத் தவிர வேறு வழியில்லை என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளதாக குறித்த பத்திரிகைச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி செய்தியில் தெரிவித்த சம்பவம் மட்டுமன்றி ஏனைய போக்குவரத்துப் பாதையிலும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவது பத்திரிகைகள் மற்றும் சமூக ஊடகங்கள் வாயிலாகவும் ஆணைக்குழுவினால் அவதானிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்குறித்த சம்பவங்கள் தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுத்து தங்களின் சாரதிகளுக்கும் நடத்துநர்களுக்கும் உரிய அறிவுறுத்தல்களை வழங்கி ஆணைக்குழுவிற்கு அறிக்கை ஒன்றினை உடன் சமர்ப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

இவ்விடயமானது, 1996 ஆம் ஆண்டு 21 இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தின் 18 (சி) இன் பிரகாரம் தேவைப்படுத்தப்படுகின்றது.

அந்தக் கடிதத்தின் பிரதி வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை பிரதித் தலைவருக்கும் தனியார் போக்குவரத்துச் சாரதி மற்றும் நடத்துநர்களுக்கும் உரிய அறிவுறுத்தல்களை வழங்குவதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# ரூபா மேலும் வீழ்ச்சி

கொழும்பு, மார்ச் 17

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்று மேலும் வீழ்ச்சியடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள நாணய மாற்று வீதத்தின்படி, நேற்று அமெரிக்க டொலரின் கொள்முதல் பெறுமதி 329 ரூபா 02 சதமாகவும், விற்பனை பெறுமதி 346 ரூபா 33 சதமாகவும் பதிவாகியுள்ளது.

இந்த மாதத்தின் தொடக்கத்தில் இருந்து அமெரிக்க டொலர் மற்றும் ஏனைய முக்கிய வெளிநாட்டு நாணயங்களுக்கு எதிராக இலங்கை ரூபாவின் மதிப்பு உயர்ந்து வந்திருந்தது.

எனினும், கடந்த வெள்ளிக்கிழமை முதல் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் மதிப்பு மீண்டும் சரிந்து வருகிறது.

நேற்று முன் தினம் அமெரிக்க டொலரின் கொள்முதல் பெறுமதி 327 ரூபா 59 சதமாகவும், விற்பனை பெறுமதி 344 ரூபா 66 சதமாகவும் பதிவாகியிருந்தது. (அ)

# தேர்தல் நடத்துவதற்கு நாங்கள் அஞ்சவில்லை

## கூறுகிறார் ஜானக வகும்புர

கொழும்பு, மார்ச் 17

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கு நாங்கள் அஞ்சவில்லை. தேர்தலை நடத்தாமல் விட்டால் அதிக பாதிப்பு எங்களது கட்சிக்குத்தான் என பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தரும், இராஜாங்க அமைச்சருமான ஜானக வகும்புர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த 2018 தேர்தலில் அதிக சபைகளைக் கைப்பற்றியது நாங்கள்தான்.

ரணில் விக்கிரமசிங்க பிரதமரான போதும் சரி, ஜனாதிபதியான போதும் சரி எதிர்க் கட்சிகளைச் சேர்ந்து செயற்படுவதற்கு அழைப்பு விடுத்தார். தொடர்ந்து அழைப்பு விடுகின்றார்.

சிலர் அந்த அழைப்பை ஏற்று அரசாங்கத்துடன் இணைந்தனர். சிலர் அரசாங்கத் துக்கு ஆதரவாக கருத்துத் தெரிவிக்கின்றனர்.

தற்போது இலங்கைக்கு வெளிநாட்டு சுற்றுலாப்பயணி கள் வரத்தொடங்கியுள்ளனர். அதைக் கெடுத்துக்கொள்ள முடியாது.

பொருட்களின் விலைகள் குறைந்து கொண்டு செல்கின்றன. தங்கத்தின் விலையும் குறைந்துள்ளது.

டொலரின் பெறுமதி குறைந்துள்ளதால் இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதை மக்கள் உணரத் தொடங்கியுள்ளனர்.

தேர்தலை நடத்துவதற்கு நாங்கள் அஞ்சவில்லை. தேர்தலை நடத்தாமல் விட்டால் அதிக பாதிப்பு எங்களது கட்சிக்குத்தான்.

மாகாண சபைத் தேர்தல் நடத்தாமல் இருப்பதால் அதிலும் எங்களுக்கே நட்டம். அதிகமான முதலமைச்சர்களும் அமைச்சர்களும் உறுப்பினர்களும் எங்களது கட்சியைச் சேர்ந்தவர்கள். அவர்களை நாம் இழந்துள்ளோம். எல்லோரும் இப்போது வீட்டில்-என்றார்.

(அ)

# வங்குரோத்து நிலையிலிருந்து நாடு மீண்டால் மட்டுமே தீர்வு கிடைக்கும்

## சுட்டிக்காட்டுகிறார் சுரேஷ் பிரேமச்சந்திரன்

யாழ்ப்பாணம், மார்ச் 17

வங்குரோத்து நிலையில் இருந்து நாடு மீண்டெழுந்து பொதுமக்களுக்கான வருமான நிலைமையை வலுப்படுத்துவதன் ஊடாக மாத்திரமே அந்நிய செலாவணியை பெற்றுக் கொள்ள முடியும் என்று ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறினார்.



இந்த நிலையில் தேர்தல்கள் ஆணையாளர் எந்தவித உறுதியான முடிவுகளையும் எடுக்க முடியாதவராகவும், வெறுமனே திகதியை மாத்திரம் அறிவிக்கக் கூடியவராகவும் இருப்பதாக அவர் குற்றம் சுமத்தினார்.

சுமந்திரன் வெளியிடும் கருத்துக்களில் தெளிவில்லை. தமிழரசுக் கட்சி தாங்களாகத் தீர் மானங்களை மேற்கொண்டு கூட் டமைப்பில் இருந்து வெளியே றியது எனவும் அவர் குறிப்பிட்டார்.

(அ)

# 900 சிறுவர்கள் கடுமையான போசாக்கின்மையால் பாதிப்பு

கொழும்பு, மார்ச் 17

பொலனறுவையில் 900 சிறுவர்கள் கடுமையான போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று பொலன்னறுவை மாவட்டச் செயலாளர் டபிள்யூ.ஏ.தமர்சிறி தெரிவித்தார்.

பொலனறுவை மாவட்டத்திலேயே அதிகளவான குடும்பங்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்து வருகின்றன.

இந்நிலையிலேயே குறித்த மாவட்டத்தில் 900 சிறுவர்கள் கடுமையான போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட செயலாளர் தெரிவித்தார்.

இதேவேளை மேலும் சில குடும்பங்கள் நாளொன்றுக்கு ஒருவேளை அல்லது இரண்டு வேளை உணவுகளை மட்டும் உட்கொண்டு வாழ்ந்து வருவதாகவும் அவர் கூறினார்.

“ஒருவேளைக்கான உணவுப் பொதியை வழங்கி அந்த வேளைக்கான பசியை போக்கும் பணியை முன்னெடுக்கின்றோம். என்றாலும்கூட பட்டினியில் வாடும் மக்களுக்கு இது நிரந்தரத் தீர்வாக அமையாது.

அந்த குடும்பங்களை பொருளாதார ரீதியில் பலப்படுத்துவதற்கு ஏதேனும் நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள வேண்டியது அவசிமாகும்“ என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

(அ)

# மகனின் தாக்குதலில் தந்தை படுகொலை!

கொழும்பு, மார்ச் 17

பொலனறுவை பிரதேசத்தில் நபரொருவர் தனது மகனால் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடக பிரிவு, நேற்று காலை வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மதுபோதையில் வீட்டுக்கு வந்த குறித்த நபர் தனது மனைவியை தாக்கியுள்ளார் என்றும் ஆத்திரமடைந்த அவரது மகன் பொல்லினால் குறித்த நபரின் தலையில் தாக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தாக்குதலில் காயமடைந்த நபர் பொலன்னறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய 16 வயது மகனை கைது செய்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)




## வரவு-செலவு திட்டத்தை எதிர்த்து கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு, மார்ச் 17

"அநீதியான அரசாங்கத்தின் அசாதாரணமான வரி விதிப் புக்கொள்கை மற்றும் மக்களை அழுத்தத்திற்கு உள்ளாக்கும் வரவு-செலவு திட்டத்தை எதிர்ப்போம்" எனும் தொனிப் பொருளில் கொழும்பில் அரசாங்கத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டமொன்று முன்னெ டுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டம் பல் கலைக்கழக ஆசிரிய சங்கங்க ளின் சம்மேளனத்தால் நேற்று கட்புல அரங்கேற்ற கலைகள் பல்கலைக்கழகம் முன்பாக முன்னெடுக்கப்பட்டது. (அ)

# மக்களின் வாழ்க்கையை நாசமாக்குகிறார் ரணில்!

## அநுரகுமார குற்றச்சாட்டு!



கொழும்பு, மார்ச் 17

**மக்களின் வாழ்க்கையை நாசமாக்க வேண்டும் என் பதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சதித் திட்டம் என ஜே.வி.பியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பின ருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கை யில் -

ஜனாதிபதி பதவி என்பது ரணிலுக்குப் பரம்பரை பரம் பரையாக உரித்தான சொத்து என்று நினைக்கின்றார். அது மக் களின் ஆணையின் ஊடாகக் கிடைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அவர் இல்லை.

1977இல் இருந்து 2020ஆம் ஆண்டு வரை மக்கள் அவருக்கு அரசியல் ஆணை வழங்கினர். அதன் பின் மக்கள் அவரை விரட்டினர்.

அவரை மக்கள் இவ்வாறு விரட்டுவார்கள் என்று அவர் ஒருபோதும் நினைக்க வில்லை. இதனால் அவருக்கு மக்கள் மீது குறிப்பாக கொழும்பு மக்கள் மீது கடும் கோபம் உண்டு.

அந்தக் கோபத்தை அவர் பல வழிகளில் தற்போது வெளிக்காட்டி வருகின்றார்.

சம்பளத்தில் அரைவாசியை அரசு வரி என்ற பெயரில் பறித் துக் கொள்கிறது. மக்களின் வாழ்க்கையை நாசமாக்க வேண்டும் என்பதே ரணிலின் சதித் திட்டம்.

க. பொ. த உயர்தரப் பரீட்சை ஆரம்பமாகும் போதே மின் வெட்டை நிறுத்துமாறு மக்கள் அரசிடம் கேட்டனர்.

ஆனால், அரசு மறுத்து விட்டது. பின்னர் பெப்ரவரி 16 ஆம் திகதி மின் கட்டணத்தை அதிகரித்து மின்வெட்டை மறுநாள் 17ஆம் திகதி நிறுத்தி யது அரசு. இதனூடாகவும் மக் களை ரணில் பழிவாங்கினார்.

பெப்ரவரி 17 ஆம் திகதி தான் உயர்தரப் பரீட்சை முடிவ டைந்தது. அன்றைய தினம் தான் அரசு மின்வெட்டை நிறுத்தியது. பாடசாலை மாண வர்களை ரணில் எப்படிப் பழி வாங்கினார் என்பது இதன்மூலம் தெளிவாகத் தெரிகின்றது.

மேலும், உங்களது அம்மா மார், அப்பாமார் என்னை விரட்டினார்கள். நீங்கள் (பாட சாலை மாணவர்கள்) துன்பத்தை அனுபவியுங்கள் என்பதுதான் ரணிலின் அந்தச் செய்தி - என்றார். (அ)

# இரு புதிய வகை பல்லி இனங்கள் இலங்கையில் கண்டறியப்பட்டன!



கொழும்பு, மார்ச் 17

இலங்கையில் இரண்டு புதிய வகை பல்லிகள் அடை யாளம் காணப்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்டத் தின் எத்தகல மற்றும் குருநாகல் மாவட்டத்தில் கல்கிரிய ஆகிய மலைக் காடுகளின் குன்றுகளில் இந்த பல்லிகள் கண்டுபிடிக்கப்பட் டுள்ளன.

அம்பாறை மாவட்டத் தின் எத்தகலவில் காணப்படும் பல்லிக்கு Jayaweera's day gecko-cnemaspis Jayaweerai என்றும், கல்கிரியில் காணப் படும் பல்லிக்கு Nanayakkara's day gecko - cnemaspis nanaya kkara என்றும் பெயர் சூட்டப் பட் டுள்ளது.

இந்த கண்டுபிடிப்பு டன், இலங்கைக்கு சொந்த மான பகலில் உலாவும் பல்லி இனங்களின் எண் ணிக்கை 42 ஆக அதிகரித் துள்ளது. அத்துடன், மொத்த பல்லி இனங்களின் எண்ணிக்கை 65 ஆக உயர்ந்துள்ளது.

இந்த இரண்டு பல்லி இனங்களும் அழி வடையும் அபாயத்திலுள்ள இனங்களாக குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# மீண்டும் நாடகமாக மாறியுள்ளது தேர்தல்

## எதிரணி எம்.பி. கருத்து



கொழும்பு, மார்ச் 17

உள்ளூராட்சி சபைத் தேர் தல் மீண்டும் நாடகமாக மாறி யுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி யின் பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுடன் எங்களது கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் யாரும் டீல் வைத்துக்கொள்ள வில்லை.

ஜனாதிபதியின் அலுவலகத் துக்கு அருகே எங்களது பாராளுமன்ற உறுப்பினர்கள் யாரும் போய் நிற்பதில்லை.

இந்த ஆட்சியாளர்களால் மக்கள் பிரச்னைக்குள் தள்ளப் பட்டுள்ளனர்.

இதனால் மக்கள் ஆர்ப்பாட் டம் செய்கின்றார்கள். இது அவர்களின் உரிமை.

நாடு வங்குரோத்து நிலையை அடைவதற்கு முன்பே நாம் சர்வதேச நாணய நிதியத்திடம் போகச் கூறினோம். ஆனால், நாடு நல்லா சீரழிந்த பின்பே அங்கே போய் நிற்கின்றார்கள்.

அப்போதே போயிருந்தால் இப்போது மக்களின் கழுத்தை நெருக்கி சர்வதேச நாணய நிதியத்திடம் உதவி கேட்க வேண்டிய தேவை ஏற்பட்டி ருக்காது.

சர்வதேச நாணய நிதியத் தின் நிபந்தனையால்தான் கழுத்தை நெரிக்கும் வகையில் மின்சாரக் கட்டணம் அதிகரிக் கப்பட்டது. நட்டம் ஏற்படும் நிறுவனங்களை இலாப மீட்டும் நிறுவனங்களாக மாற்றி விற்பதே அந்த நிபந்தனை.

வரியைச் செலுத்தாத நிறுவனங்கள் எத்தனையோ உள்ளன. அந்த நிறுவனங்களிட மிருந்து வரியை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

அதைச் செய்யாமல் ஏழை மக்கள் மீது புதுப்புது வரிக ளைச் சுமத்தி அவர்களிடம் இருந்து வரியை அறவிடும் முறைதான் இப்போது நடை முறையில் உள்ளது.

ஒரு பக்கத்தில் உள்ளூர் உற்பத்திகள் வீழ்ச்சியடைந்து கொண்டு செல்கின்றன. அவற் றைத் தூக்கி நிமிர்த்துவதற்கு எந்த ஏற்பாடும் இல்லை.

உள்ளூராட்சி சபைத் தேர் தல் மீண்டும் நாடகமாக மாறி யுள்ளது. தேர்தல் ஏப்ரல் 25ஆம் திகதி உறுதியாக நடக்கும் என்று சொல்லவில்லை.

தேர்தல் நடத்துவதற்கான பொருத்தமான திகதி 25 என்று தான் தேர்தல் ஆணையாளர் கூறியுள்ளார்.

தேர்தலுக்குப் பணம் தருவ தாக நிதி அமைச்சு இன்னும் சொல்லவில்லை. தபால் மூல வாக்குச்சீட்டுக்களை அச்சடிப்ப தற்கு மீண்டும் பணம் கேட்கின் றார்கள் - என்றார். (அ)

# போராட்டக்காரர்களை அடக்க முயலும் அரசை ஓட ஓட விரட்டியடிக்கவேண்டும்

## துமிந்த நாகமுவ வலியுறுத்தல்



கொழும்பு, மார்ச் 17

போராட்டக்காரர்களைத் தாக்குதல் நடத்தி அடக்க முய லும் ரணில் - ராஜபக்ஷ நிழல் அரசை மக்கள் ஒன்றிணைந்து ஓட ஓட விரட்டியடிக்க வேண்டும் என முன்னிலை சோஷலிசக் கட்சியின் பிரசார செயலாளர் துமிந்த நாகமுவ வலியுறுத்தினார்.

அவர் மேலும் கூறுகையில்-

டொலர் விலை குறைந் துள்ள போதிலும் மக்களின் வாழ்க்கையில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. பொருட்களின் விலைகள் குறையவில்லை.

32 வீதமான மக்கள் உண்ண உணவின்றி உள்ளனர். கடந்த வாரங்களில் குடும்பம் குடும்ப மாகப் பல தற்கொலைச் சம்ப வங்கள் இடம்பெற்றுள்ளன. எல்லாம் வறுமை, கடன் காரணமாக இடம்பெற்றவை.

வாழ வழியில்லாமல் அவர் கள் இவ்வாறு தற்கொலை செய்கின்றனர்.

சர்வதேச நாணய நிதியத் தின் நிபந்தனைக்கு ஏற்ப மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள் ளது. மின்சார சபையை இலாப மீட்டும் சபையாக மாற்றி அதை விற்பதே இதன் நோக்கம்.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் ஒத்திப்போடுவதை நாம் எதிர்க்கின்றோம். அந்த உரிமையைக் கேட்டு ஆர்ப் பாட்டம் நடத்தினால் அதன் மீது தாக்குதல் நடத்துகின்றது அரசு. அந்தத் தாக்குதலில் இதுவரை மூவர் பலி - என் றார். (அ)

# வளி மாசு தரச்சுட்டெண் 135 புள்ளிகளாக பதிவு

கொழும்பு, மார்ச் 17

கொழும்பில் காற்று தரச்சுட் டெண் அளவு சற்று அதிகரித் துள்ளது.

கொழும்பு நகரின் வளி மாச டைவு தொடர்பான காற்று தரச்சுட்டெண் நேற்று முற்பகல் 11.30 வரை 135 புள்ளிகளாக பதிவாகியிருந்தது.

அத்துடன் யாழ்ப்பாணத் தில் 128 புள்ளிகளாக இது பதிவாகியுள்ளது.

அத்துடன் கம்பஹா மாவட் டத்தில் 130 புள்ளிகளாக பதி வாகியுள்ளது.

பத்தரமுல்லையில் 121 காற்று தரச்சுட்டெண் 121 புள்ளிகளாக பதிவானது.

பொதுவாக 101 முதல் 150 என்ற காற்று தரச்சுட்டெண் அளவானது நோயால் பாதிக்கப் பட்டவர்களுக்கும் அதிக உணர் திறன் கொண்ட தரப்பினருக் கும் ஆரோக்கியமற்றதாகும்.

# இன்னும் பத்து வருடங்களின் பின்னர்?

அரசியல் பற்றி பேசுவதற்கும், அரசியலை சரியாக பேசுவதற்கும் இடையில் மலையளவு வேறுபாடுண்டு. அரசியலை எவர் வேண்டுமானாலும் பேசிவிட்டுப் போகலாம் - ஒரு மரக்கறிக்கடையில் இருப்பர், இறைச்சிக்கடையில் இருப்பவர், ஏன் யாசகம் செய்பவரும் பேசலாம். இவ்வாறு பேசுபவர்கள் ஒவ்வொருவரும் அவர்களின் விருப்பு வெறுப்புக்களின் வழியாகவே அரசியலை புரிந்துகொள்வார்கள். அதற்கு அவர்களுக்கு உரிமையுண்டு. ஆனால் ஒரு சமூதாயத்தின் எதிர்காலம் தொடர்பில் சிந்திப்பவர்கள் சாமானியர்கள் போன்று அரசியலை, தங்களின் விருப்பு வெறுப்புக்களிலிருந்து நோக்க முடியாது. அரசியலை சரியாக புரிந்துகொள்ள முற்படுவதென்றால் என்ன? கடந்தகால அனுபவங்களிலிருந்து கற்றுக்கொண்டு, நிகழ்காலத்தை அணுகுவதும், அதிலிருந்து எதிர்காலத்தை கையாளுவதற்கான வாய்ப்புக்களை தேடுவதும் தான் சரியானதொரு அரசியலாக இருக்க முடியும்.

ஆனால் யுத்தம் முடிவுற்று பதின்மூன்று வருடங்கள் சென்றுவிட்ட பின்னரும் கூட, தமிழ் அரசியல் சூழலில் இடம் பெறும் உரையாடல்களில் அரசியல் முதிர்சியை காணவில்லை. அனைவருமே, அதே பழைய சகதிக்குள்ளேயே மூழ்கிக் கிடக்கின்றனர். இப்போதும் துரோகி, ஒட்டுக்குழு, காட்டிக்கொடுப்பாளர், இப்படியான சொற்களைகளையே கேட்க முடிகின்றது. தமிழரசு கட்சி, தமிழ் தேசிய கூட்டமைப்பிலிருந்து வெளியேறிய பின்னர், நேற்றுவரையில் ஒன்றாக பயணித்தவர்களை நோக்கி, எதுவித குற்றவுணர்வுமின்றி, காட்டிக்கொடுத்தவர்கள், சந்திகளில் நின்று கொலை செய்தவர்களென்று சாதாரணமாக கூறமுடிகின்றதென்றால், தமிழ் சமூகத்தின் அரசியல் முத்திர்சியை என்னவென்பது! கடந்த காலத்திலிருந்து கற்றுக்கொள்ளும் ஒரு சமூகம் இவ்வாறான போக்கை ஒரு போதுமே ஆதரிக்காது. இவ்வாறான சொற்களை பயன்படுத்த முற்படும் அரசியல்வாதிகளை கண்டிக்கும் போக்கை எங்குமே காணமுடியவில்லை. கடந்த காலத்தில் பயன்படுத்தப்பட்ட துரோகி, காட்டிக்கொடுப்பாளர் போன்ற சொற்களின் வழியாக தமிழர்கள் சாதித்தது என்ன? நமக்குள் நாமே வெறுப்பையும் விரோதங்களையும் வளர்த்ததை தவிர, வேறு எதனை சாதிக்க முடிந்தது?

முக்கால் நூற்றாண்டு கால அரசியல் அனுபவம் நமக்குண்டு. அதற்கு முற்பட்ட, பொன்னம்பலம்களின் காலத்தை இந்தக் கட்டுரை கருத்தில்கொள்ளவில்லை. இந்த முக்கால் நூற்றாண்டில் நாம் கற்றுக் கொண்டதென்ன? செல்வநாயகம் தொடக்கம் சம்பந்தன் வரையில் பல்வேறு கோரிக்கைகள் காலத்திற்கு காலம் உச்சரிக்கப்பட்டிருக்கின்றது. தமிழ் புதிய புலிகள் தொடக்கம் தமிழீழ விடுலைப் புலிகள் வரையிலான ஆயுத விடுதலைப் போராட்ட அனுபவங்கள் நமக்கு ஏராளமான விடயங்களை கற்பித்திருக்கின்றது. தமிழரசு கட்சி மேடைகளில் ஒலித்த துரோகி தியாகிக் கதைகள் பின்னர், ஆயுத விடுதலை இயக்கங்களின் மத்தியில் துப்பாக்கிக் குண்டுகளின் வழியாக தீர்த்துக் கொள்ளப்பட்டது. ஆங்கிலப் புலமை கொண்ட, அப்புக்காத்து அரசியல்வாதிகள் பின்னர், சிறிலங்கா இராணுவத்தின் எண்ணிக்கையை விடவும் அதிகமானவர்களை கொண்டிருந்த தமிழ் ஆயுத இயக்கங்கள் அனைத்தினதும் இறுதி அடைவு என்ன? இன்று தமிழர்கள் வந்து சேர்ந்திருக்கும் இடத்தையெண்ணி பெருமைப் பட என்ன இருக்கின்றது? ஆனால் நாம்



> **இன்னும் பத்து வருடங்களுக்குள் விடயங்களை கையாளாவிட்டால், 13வது திருத்தச்சட்டம் கூட, தமிழர்களுக்கு இல்லாமல் போகலாம். அது அரசியலமைப்பில் இருக்கும், ஆனால், அது அவ்வப்போது உச்சரித்துவிட்டுப் போகும் விடயமாகிவிடலாம். இறுதியில் தமிழர்களுக்கு எதுவுமே இல்லாமல் போகும். தமிழ் தேசிய அரசியலென்பது, இறுதியில், நல்லூர் கோவிலடி அரட்டையாக மாறிப்போகும். ஆண்டுகொரு, ஆர்ப்பாட்டம், சிவில் சமூக அறிக்கையுடன் அரசியல் சுருங்கிப்போகும்.**

கடந்துவந்த பாதை நமக்கு போதுமான படிப்பினைகளை தந்திருக்கின்றது. இதிலிருந்து கற்றுக்கொள்வது மட்டும்தான் நாம் செய்ய வேண்டியதாகும்.

சட்டப்புலமை, ஆங்கிலப் புலமை, இராணுவ ஆற்றல் இவையனைத்தும் இருந்தும்தானே நாம் தோல்வியுற்றிருக்கின்றோம். அப்படியானால் இவற்றையும் தாண்டி அரசியலில் சிந்திக்கும் திறன் அவசியமென்பதைத்தானே, கடந்தகாலம் நமக்கு கற்றுத்தருகின்றது.

ஏனெனில் அவைகளின் மூலம் அரசியல் சவால்களை வெற்றிகொள்ள முடியுமென்றால், ஏற்கனவே நாம் அனைத்து சவால்களையும் வெற்றிகொண்டல்லா இருந்திருக்க வேண்டும். இன்றைய தமிழ் தேசிய அரசியலை உற்றுநோக்கினால் ஒரு விடயம் தெளிவாகும். அதாவது, நமது அனைத்து உரையாடல்களும் தோல்விக்கு விளக்கமளிப்பதாகவும், மற்றவர்களை குற்றம்சாட்டுவதாகவுமே இருக்கின்றது. ஒரு கட்சியை பிறிதொரு கட்சி குற்றம்சாட்டுவது போன்றே, மறுபுறம், அரசாங்கத்தை குற்றம்சாட்டுவது, இந்தியாவை குற்றம்சாட்டுவது, அமெரிக்காவை குற்றம்சாட்டுவது. கடந்த பதின்மூன்று வருடகால அரசியலை உற்றுநோக்கினால் இதனைத் தவிர வேறு எதனையும் நம்மால் காணமுடியாது.

முள்ளிவாய்க்காலில் ஆரம்பித்த குற்றச்சாட்டுக்கள், இப்போது முள்ளிவாய்க்காலுக்கு பின்னரான குற்றச்சாட்டுக்களாக மாறியிருக்கின்றது. முதலில் ஒரு உண்மையை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதாவது, ஈழத் தமிழர்கள் மீது எவருக்கும் தனியான பிரியங்கள் இல்லை. அப்படி தனியான ஈடுபாடு தமிழர்கள் மேல் இருந்திருந்தால், முள்ளிவாய்க்கால் அவலம் நிகழ்ந்திருக்காது. ஒரு வரையறுக்கப்பட்ட நிலப்பகுதிக்குள் யுத்தம் இடம்பெற்றால் மக்கள் கொல்லப்படுவார்கள் என்பதை எவருமே அறியாமல் இருக்கவில்லை. ஆனால் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முடிவுக்கும் தீர்மானத்திற்கு முன்னால், ஏனைய அனைத்து விடயங்களும் இரண்டாம் பட்சமாகியது.

ஆனால் விடுதலைப் புலிகளின் முடிவுக்கு முன்னர் உலகம் சில எச்சரிக்கைகளை வழங்காமலும் இருக்கவில்லை. புலிகளுக்கு முன்னால் இருந்த ஒரேயொரு தெரிவை புலிகள் நிராகரித்த போது, மற்றவர்கள், அவர்களுக்கு முன்னாலிருந்த ஒரேயொரு தெரிவை எடுத்தனர். இதில் ராஜபக்சக்கள் ஒரு கருவி மட்டும்தான். அதனை ராஜபக்சக்கள் புரிந்துகொள்ள தவறியபோது, அவர்களுக்கான நெருக்கடி ஆரம்பித்தது. இன்று பயங்ரவாதத்தை வெற்றிகொண்டதாகவும், பயங்கரவாதத்தை தோற்கடிப்பதற்கு உலகிற்கே ஆலோசனை வழங்க முற்பட்ட கோட்டபாய ராஜபக்சவின் நிலையென்ன என்பதை அனைவருமே பார்த்துக் கொண்டிருக்கின்றனர். விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதி யுத்தத்தின் போது, ஒரு புலம்பெயர் தமிழ் புத்திஜீவி, மேற்குநாட்டு ராஜதந்திரி ஒருவருடனான உரையாடலின் போது, பரிமாறப்பட்ட விடயமொன்று வெளியாகியிருந்தது. அதாவது, மகிந்த ராஜபக்ச மேற்குலகிற்கு எதிரான நிலைப்பாடுடைய ஒருவர். அவர் முன்னெக்கும் யுத்ததை ஏன் ஆதரிக்கின்றீர்கள்- இதற்கு அந்த ராஜதந்திரி வழங்கிய பதில். இப்போது ராஜபக்ச, பிரபாகரனை பார்த்துக் கொள்ளட்டும், பின்னர் நாம் ராஜபக்சவை பார்த்துக் கொள்வோம்.

ஏனெனில் உலகிற்கு விடுதலைப் புலிகள் ஒரு விடயமல்ல. எனது முன்னைய பத்தியொன்றிலும் குறிப்பிட்டிருக்கின்றேன். இறுதி யுத்தத்தின் போது, ஐக்கிய நாடுகள் சபையின் பேச்சாளராக இருந்தவர், கோடன் வைஸ். தனது அனுபவங்களை தொகுத்து ‘கூண்டு’ என்னும் பெயரில் நூல் ஒன்றையும் எழுதியிருந்தார். அவர் 2011இல், வெளிவிவகார சஞ்சிகையில் புலிகளின் இரத்தம் என்னும் தலைப்பில் கட்டுரையொன்றை எழுதியிருந்தார். அதில் அவர் கூறிய விடயமொன்று, உலகை புரிந்துகொள்வதற்கு போதுமானது.

அவர் எழுதுகின்றார், புலிகள் இல்லாத உலகம் முன்னரைவிடவும் இப்போது சிறப்பாக இருக்கின்றது. இவ்வளவுதான், புலிகள் இயக்கதிற்கு உலகம் கொடுத்த இடம். உலகின் பார்வையில் நமது தியாகங்கள், அர்ப்பணிப்புக்கள் அனைத்தும் பயங்கரவாதமாகும். நாம் நமக்குள் எவ்வாறான புனிதங்களையும் பாதுகாத்துக் கொள்ளலாம், ஆனால் உலகின் பார்வையோ வேறு. விடுதலைப் புலிகள் இயக்கம் வீழ்த்தப்பட்டு, அதன் தலைவர் பிரபாகரன் உயிரிழந்து, பதின்மூன்று வருடங்கள் கழிந்துவிட்ட பின்னரும் கூட, அமெரிக்கா மற்றும் மேற்குலக



**யதீந்திரா**

நாடுகள் புலிகள் அமைப்பை இப்போதும் பயங்கரவாத பட்டிலில்தான் வைத்திருக்கின்றனர். இதிலிருந்து ஒரு விடயத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அதாவது, நமக்குள் நாம் துரோகியென்றும், ஒட்டுக்குழுவென்றும், காட்டிக் கொடுப்பாளர்களென்றும் அடிபட்டுக் கொண்டிருக்கும் போது, உலகமோ அனைத்தையும் பயங்கரவாதமென்னும் ஒரு சொல்லால் தூக்கியெறிந்துவிட்டது.

இன்றைய சூழலில் ஒரு புதிய தலைமுறை அரசியலை கையிலெடுக்க வேண்டும். அது அரசியலை மதமாக்காத, கடந்தகாலத்தை கற்றுக்கொள்வதற்காக மட்டுமே பேசுகின்ற ஒரு தலைமுறையாக இருக்க வேண்டும். கடந்த காலத்தில் ஒரு விடயம் ஆதரிக்கப்பட்டது, ஏற்றுக் கொள்ளப்பட்டது என்பதற்காக, அதனை எல்லாக் காலத்திலும் காவித்திரிய வேண்டுமென்பதல்ல. நிகழ்காலத்தின் தேவைகளோடு ஒரு விடயம் பொருந்தவில்லையாயின், அது பயனற்றது. ஏனெனில் நிகழ்காலம் என்பது மட்டுமே உண்மையானது. ஏனெனில் அது மட்டுமே நம்மிடமுண்டு.

நம்மிடமுள்ள ஒன்றிலிருந்துதான் எதிர்காலத்தை நோக்க வேண்டும். இப்போதும் சிலர் வட்டுக்கோட்டை தீர்மானம் தொடர்பில் பேசுவதுண்டு. வட்டுக்கோட்டைத் தீர்மானமென்பது, 1976ஆம் ஆண்டில், அன்றைய தலைமுறை முன்வைத்த விவகாரம். அதனை கேள்விகளின்றி பிறிதொரு தலைமுறை எதற்காக சுமக்க வேண்டும்? வட்டுக்கோட்டை தீர்மானத்தை முன்வைத்த செல்வநாயகம் தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி, ஒரு தெளிவான புரிதலுடன் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைக்கவில்லை. அடையும் வழிதெரியாமலேயே தனிநாட்டுக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. எப்படி அடையப் போகின்றீர்களென்னும் கேள்விக்கு செல்வநாயகம் வழங்கிய பதில், நாங்கள் ஒரு நிலைப்பாட்டை முன்வைக்கின்றோம், அவர்கள் எங்களை வெளியில் வீசிவிடுவார்கள். ஆனால் நடந்ததோ வேறு. செல்வநாயகத்தின் தவறால், ஒரு தலைமுறையே அழிந்து போயிருக்கின்றது ஆனால் செல்வநாயகத்தின் குடும்ப வழித்தோன்றல்களோ நிலத்திலேயே இல்லை.

ஒரு தலைமுறை தெளிவான வேலைத்திட்டமற்று முன்வைத்த கோரிக்கைளை, எதற்காக பிறிதொரு தலைமுறை சுமக்க வேண்டும்? அரசியலை இந்த அப்படையில்தான் இளைய தலைமுறை புரிந்து கொள்ள வேண்டும். அவர் கூறினார் - இவர் கூறினார் என்பதற்காகவெல்லாம் கடந்தகாலத்தின் நிலைப்பாடுகளை நிகழ்காலத்தில் சுமக்க முற்படக் கூடாது.

யுத்தமில்லாத கடந்த பதின்மூன்று வருடங்களை உற்று நோக்கினால் ஒரு விடயம் தெளிவாகும். அதாவது, அரசியல் தீர்வு தொடர்பில் முன்னோக்கி பயணிக்க முடியவில்லை. தமிழர்கள் என்னதான் சத்தங்களை எழுப்பினாலும் கூட. ஒரு கட்டத்திற்கு மேல் போக முடியாதென்னும் நிலைமையே காணப்படுகின்றது. ஏன் முடியவில்லையென்னும்

(09ஆம் பக்கம் பார்க்க)

ஈழநாடு



# மாற்றத்துக்கான வாய்ப்பு!

## உலக வங்கித் தலைவர் அஜய் பங்கா

புலம்பெயர்ந்த இந்தியர்கள் படைத்து வரும் சாதனைகளைப் பார்த்து உலகின் ஏனைய நாடுகள் வியந்து போயிருக்கின்றன. அதிலும் குறிப்பாக, அமெரிக்காவுக்குப் புலம்பெயர்ந்த இந்தியர்கள் உலகின் வலிமையான பன்னாட்டு நிறுவனங்களின் தலைமைப் பொறுப்புகளை ஏற்றிருப்பது அவர்களது உழைப்பாலும், திறமையாலும்தானே தவிர எந்தவித சலுகையாலும் அல்ல.

எந்த அளவுக்கு அமெரிக்கா திறமை சார்ந்ததாக மட்டுமே இருக்கிறது என்பதன் அடையாளம், உலக வங்கியின் தலைவராக இந்தியாவிலிருந்து புலம்பெயர்ந்த அஜய் பங்கா தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது. வாய்ப்புகளைத் தேடி தங்களது நாட்டிற்கு வரும் பிற தேசத்தவர்களின் திறமையை அங்கீகரிப்பதில் தயக்கம் காட்டாமலிருக்கும் அமெரிக்க சமுதாயத்தின் பன்முகத்தன்மையின் அடையாளமாகவும் அஜய் பங்காவின் தேர்வைக் குறிப்பிடலாம்.

அமெரிக்காவின் மேற்கு கடற்கரையோரமாக நடக்கும்போது, நிமிடத்துக்கு ஒரு இந்திய வம்சாவளியினர் தென்படுவார் என்று விளையாட்டாக கூறுவார்கள். அவர்கள் தகவல் தொழில்நுட்பத் துறையில் மட்டுமல்லாமல் ஏனைய எல்லா துறைகளிலும் தடம்பதித்து வெற்றிக் கொடி நாட்டி வருகிறார்கள். முக்கியமான உயர் பதவிகளில் அந்நிய வம்சாவளியினருக்கு வாய்ப்பு வழங்குவதன் மூலம் தன்னை வலிமைப்படுத்திக் கொள்ளும் அமெரிக்காவின் பரந்த மனப்பான்மைதான் அஜய் பங்காக்களின் வெற்றிக்கு காரணம்.

பெப்சிகோவின் தலைமைப் பொறுப்பை இந்திரா நூயி ஏற்றபோது இந்தியாவில் மட்டுல்ல, ஏனைய நாடுகளிலும் அது பரபரப்பாகப் பேசப்பட்டது. இந்தியப் பெண்மணி ஒருவர் தடைகளையெல்லாம் உடைத்தெறிந்து பன்னாட்டு நிறுவனம் ஒன்றின் தலைமைப் பொறுப்பை அடைந்த வரலாறு அமெரிக்கர் அல்லாத இளைஞர்களுக்கெல்லாம் முன்னுதாரணமாகத் திகழ்ந்தது. இப்போது



பல டிரில்லியன் டாலர் மதிப்புள்ள பன்னாட்டு கார்ப்பரேட் நிறுவனங்களின் தலைமைப் பொறுப்பில் இந்திய வம்சாவளியினர் பலர் இருக்கின்றனர். அந்த வரிசையில் சமீபத்தில் இணைந்திருப்பவர்தான் உலக வங்கியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் அஜய் பங்கா.

உலக வங்கியின் தலைவரை அமெரிக்காவும், சர்வதேச நிதியத்தின் (ஐஎம்எஃப்) தலைவரை ஐரோப்பிய கூட்டமைப்பும் தீர்மானிப்பது வழக்கம். உலக வங்கியின் இயக்குநர்களாக இந்தியர்கள் இருந்திருக்கிறார்கள். ஆனால் ‘ஆங்கிலோ சாக்ஸான்’ இன வெள்ளையர் அல்லாத ஒருவர் தலைமைப் பொறுப்பில் நியமிக்கப்படுவது இதுதான் முதல்முறை என்பதால் அஜய் பங்காவின் தேர்வு முக்கியத்துவம் பெறுகிறது.

உலக வங்கியின் தலைவராக இருந்த டேவிட் மல்பாஸ் பதவி விலகுவதாக கடந்த பிப்ரவரி மாதம் அறிவித்தபோது உலக வங்கியின் நிர்வாகக் குழு, அதன் தலைமைப் பொறுப்புக்கு மார்ச் 29-க்குள் பெண்மணி ஒருவரை பரிந்துரைக்கும்படி எல்லா நாடுகளையும் கேட்டுக்கொண்டது. ஆனால், அடுத்த நாளே அமெரிக்கா மாற்றுக் கருத்துக்கு இடமே ஏற்படாத வண்ணம் அஜய் பங்காவின் பெயரை அறிவித்து முற்றுப்புள்ளி வைத்துவிட்டது.

அந்தப் பொறுப்புக்கு முற்றிலும் தகுதியானவர்தான் அஜய் பங்கா என்பதில் யாருக்கும் ஐயப்பாடு இருக்க முடியாது . ஆனால் சில விமர்சனங்கள் எழாமலும் இல்லை. அவருடைய அனுபவம் பெரும்பாலும் தனியார் கார்ப்பரேட் நிறுவனங்களை நடத்துவதில்தான் இருந்திருக்கிறது என்பதால் உலக வங்கி போன்ற நிறுவனத்தின் தலைமைப் பொறுப்புக்கு பொருத்தமானவர்தானா என்கிற கேள்வி எழுப்பப்படுகிறது.

விமர்சகர்கள் கூறுவதுபோல, உலக வங்கியின் பொறுப்பு என்பது கார்ப்பரேட் நிறுவனத்திலிருந்து முற்றிலுமாக மாறுபட்டது. பின்தங்கிய, வளரும் நாடுகளின் தேவைகளை உணர்ந்து கடன் வழங்கும் சேவையை மேற்கொள்ளும் உலக வங்கி, கார்ப்பரேட் நிறுவனங்கள்போல வணிக நோக்குடன் செயல்பட முடியாது என்று அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

பல்வேறு வங்கிகளின் கடன் அட்டைகளின் இயக்கத்துக்கு அடிப்படையான ‘மாஸ்டர் கார்ட்’ நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரியாக இருந்தவர் அஜய் பங்கா. உலகளாவிய நிலையில் வேர் பரப்பிய அந்த நிறுவனத்தின் பல்லாயிரக் கணக்கான ஊழியர்களுக்கும், பல பில்லியன் டாலர் வர்த்தகத்துக்கும் தலைமைப் பொறுப்பை ஏற்ற அனுபவம் அவருக்கு உண்டு.

உலக வங்கியின் தலைமைப் பொறுப்பை ஏற்கும் அஜய் பங்கா, பல சவால்களை சந்தித்தாக வேண்டும். யாருக்காக, எதற்காக உலக வங்கி தொடங்கப்பட்டது என்பதை உணர்ந்து அதற்கேற்ப திட்டங்களை வகுப்பது முக்கியமான சவால்.

உலகின் அனைத்து நாடுகளின் பங்களிப்புடன் செயல்படும் உலக வங்கியின் தலைவர், அதன் நிர்வாகக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் அனைத்து நாடுகளுக்குமான பிரதிநிதியாக இருக்க வேண்டும். ஆனால், தன்னை நியமிக்கும் அமெரிக்க நிதியமைச்சரின் கண்ணசைப்புக்கு ஏற்ப உலக வங்கித் தலைவர்கள் செயல்படுவார்கள் என்பதுதான் நடைமுறை எதார்த்தம். அவர்களுக்குப் பதவி நீட்டிப்பு அளிக்கவோ, கட்டாயப்படுத்தி அவர்களை வெளியேற்றவோ அமெரிக்க நிதியமைச்சரால் முடியும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

அஜய் பங்கா இந்தியாவில் படித்து வளர்ந்தவர். அதனால் வறுமையையும், வளர்ச்சியின்மையையும் நேரடியாக உணர்ந்தவர். வறுமையை அகற்றுவதிலும், வளர்ச்சியடையாத உலக நாடுகளின் முன்னேற்றத்திலும் உலக வங்கியின் தலைவராக அக்கறை செலுத்த அவரால் முடியும்.

முந்தைய தலைவர்கள், வெள்ளை மாளிகையின் உத்தரவுகளை நிறைவேற்றினார்கள் என்றால், தனது கருத்துக்கு வெள்ளை மாளிகையை செவிசாய்க்க வைக்க அஜய் பங்காவால் முடிந்தால் அது வரலாற்றுச் சாதனையாக மாறும். உலகம் அதைத்தான் அவரிடம் எதிர்பார்க்கிறது! ●

# இன்னும் பத்து வருடங்களின் ......

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

கேள்விக்கு சிலரிடம் இருக்கும் ரெடிமெட் பதில், இந்தியாவிற்கு கரிசனையில்லை. இந்தியாவிற்கு கரிசனையில்லையென்றால், இன்னொன்றை தெரிவு செய்து கொண்டு, தமிழர்கள் முன்னோக்கி செல்வதில் என்ன தடையுண்டு? இந்தியா அதன் நிலைப்பாட்டை தெளிவாக முன்வைத்த பின்னர், இந்தியாவிற்கு கரிசனையில்லையென்று கூறுவதில் என்ன பொருளுண்டு.

1987இல் இந்தியா காண்பித்த கரிசனை ஏன் பிற்காலத்தில் இல்லாமல் போனது? இதற்கு யார் காரணம்? இந்தியாவின் கரிசனை தொடர்பில் பேசுபவர்கள், மறுபுறம் அதற்கான காரணங்களை முன்வைப்பதில்லை. இன்றைய சூழலில் இந்தியா ஆகக் குறைந்தது, 13வது திருத்தச்சட்டம் தொடர்பில் கரிசனையுடன் இருப்பதே பெரிய விடயம். இந்தியாவின் ஆகக் குறைந்த கரிசனையை எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளலாமென்றுதான் தமிழ் தரப்புக்கள் சிந்திக்க வேண்டும். ஏனெனில் அதுவுமில்லையென்றால், தமிழர்களின் நிலைமை வேலியால் விழுந்தவரை மாடு ஏறிமிதித்த கதையாகிவிடலாம். இந்தியாவின் இந்தக் கரிசனை கூட தொடருமென்றும் எதிர்பார்க்க முடியாது.

இருபது வருடங்கள் ஆப்கானிஸ்தானில் நிலைகொண்டிருந்த அமெரிக்க படைகள் வெளியேறின. அமெரிக்க ஆதரவு ஆப்கான் ஜனாதிபதி நாட்விட்டு ஓடிவிட்டார். ஆப்கான் மீண்டும் தலிபான்கள் வசமானது. இது தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் அமெரிக்க ஜனதிபதி பைடனை கேட்கின்றார். மீண்டும் தலிபான்களிடம் ஆப்கானிய மக்கள் சிக்குப்பட்டுவிட்டார்களே! அதற்கு பைடனின் பதில் - ஆப்கானியர்களுக்கே, ஆப்கானிஸ்தானில் அக்கறையில்லாவிட்டால், அதற்கு நாம் என்ன செய்வது? - ஆப்கானியர்களுக்காக அமெரிக்க படைகள் செத்துக் கொண்டிருக்க முடியாது. தமிழர்களின் நிலைமையும் இப்படித்தான். விடயங்களை தமிழர்கள் கையாளாவிட்டால், இப்போதுள்ள ஓரளவு கரிசனையையும் ஏனையர்கள் கைவிட்டுவிடுவார்கள்.

கடந்த கால அனுபவங்களிலிருந்து சிந்தித்தால் தமிழர்களின் அரசியல் எதிர்காலம் மிகவும் கையறு நிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. இன்னும் பத்து வருடங்களுக்குள் விடயங்களை கையாளாவிட்டால், 13வது திருத்தச்சட்டம் கூட, தமிழர்களுக்கு இல்லாமல் போகலாம். அது அரசியலமைப்பில் இருக்கும், ஆனால், அது அவ்வப்போது உச்சரித்துவிட்டுப் போகும் விடயமாகிவிடலாம். இறுதியில் தமிழர்களுக்கு எதுவுமே இல்லாமல் போகும். தமிழ் தேசிய அரசியலென்பது, இறுதியில், நல்லூர் கோவிலடி அரட்டையாக மாறிப்போகும். ஆண்டுகொரு, ஆர்ப்பாட்டம், சிவில் சமூக அறிக்கையுடன் அரசியல் சுருங்கிப் போகும். ●

## உள்ளூராட்சி தேர்தல்:

# திணைக்களங்களுக்கு எதிரான வழக்கு விசாரணைக்கு அனுமதி!

கொழும்பு, மார்ச் 17

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க தவறிய அரச திணைக்களங்கள் பலவற்றை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை தொடர்வதற்கு உயர் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

அரசமைப்பின் 10, 12(1) மற்றும் 14(1)(ஏ) ஆகிய பிரிவுகளின் கீழ் இந்த மனுவை தொடர உயர் நீதிமன்ற நீதியரசர்களான பிரீத்தி பத்மன் சூரசேன, காமினி அமரசேகர மற்றும் ஜனக் டி சில்வா ஆகிய மூன்று நீதிபதிகள் அடங்கிய அமர்வு அனுமதி வழங்கியது.

மாற்றுக் கொள்கைகளுக்கான மையம் மற்றும் அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து ஆகியோர், திறைசேரி செயலாளர், அரசாங்க அச்சகர், பொலிஸ் மா அதிபர் மற்றும் பலரை பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டு இந்த மனுவை தாக்கல் செய்தனர்.

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களாக நபர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தல்கள் உரிய சட்டதிட்டங்களின்படி 4 வருடங்களுக்கு ஒருமுறை நடத்தப்பட வேண்டும் என மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

தேர்தல்கள் முன்பு 2018 இல் நடத்தப்பட்டன. 2022 இல் காலாவதியாகவிருந்த உள்ளூராட்சி அதிகாரசபைகளின் பதவிக்காலம் அதன் பின்னர் ஒரு வருடத்துக்கு நீடிக்கப்பட்டது. அரசாங்க அச்சகர் மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆகியோரின் நடத்தை உள்ளூராட்சி அதிகார சபைத் தேர்தலை ஒத்திவைப்பதற்கான ஒருங்கிணைந்த நடவடிக்கையை சுட்டிக்காட்டுவதாக மனுதாரர்கள் தெரிவித்தனர்.

நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியும், திறைசேரியின் செயலாளரும் 2023 பெப்ரவரி 23ஆம் திகதி கடைசி நிமிடம் வரை தேர்தலை நடத்துவதற்கான நிதி ஒதுக்கீட்டில் சவாலான விடயம் இருப்பதாக சுட்டிக்காட்டவில்லை எனவும் மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர். இந்த நடவடிக்கைகள் மனுதாரர்கள் மற்றும் இலங்கையின் குடிமக்களின் அடிப்படை உரிமைகளுக்கு பாதகமானவை என மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர்.

மாநகர சபைகள் கட்டளைச் சட்டம், நகர சபைகள் கட்டளைச் சட்டம் மற்றும் பிரதேச சபைகள் சட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் மார்ச் 19ஆம் திகதிக்குள் தேர்தலை நடத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அரச அச்சகர், பொலிஸ் மா அதிபர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க (நிதி அமைச்சராக) மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழு ஆகியோர் 19ஆம் திகதிக்குள் தேர்தலை நடத்துவதற்கு சட்டப்படி உரிய நடவடிக்கைகளை எடுக்கத் தவறியதன் மூலம் குடிமக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கத் தவறியதாக மனுதாரர்கள் சுட்டிக்காட்டினர். (ஐ)

# சிவனொளிபாத மலைக்கு செல்வோருக்கு அறிவுறுத்தல்!

கொழும்பு, மார்ச் 17

கடந்த சில தினங்களுக்கு முன்னர் சிவனொளிபாத மலைக்கு வணக்க வழிபாடுகளுக்காக சென்றிருந்த நான்கு யாத்திரிகர்கள் உணவு விஷமானதில் உயிரிழந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாக பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, மேலும் 10 பேர் உணவு விஷம் மற்றும் பாக்டீரியா தொற்றுக்கு உள்ளாகி சிகிச்சை பெற்று வருவதாக பொது சுகாதார பரிசோதகர் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண மேலும் தெரிவித்தார்.

இதனிடையே சிவனொளி பாத மலைக்கு வழிபாடுகளுக்காக செல்பவர்கள் மற்றும் சுற்றுப்பயணங்களை மேற்கொள்ளும் அனைத்து தரப்பினரும் ஆரோக்கியமான உணவு முறைகளை பின்பற்ற வேண்டும். மேலும் மலைக்குச் செல்பவர்கள் முடிந்த வரையில் கொதிக்க வைத்த நீரை தங்கள் வீடுகளில் இருந்து எடுத்துச் செல்ல வேண்டும் என அவர் மேலும் கேட்டுக் கொண்டார். (ஐ)

# உள்ளூராட்சி சபைகளின் எதிர்காலம் குறித்து பேச்சு

கொழும்பு, மார்ச் 17

மார்ச் 19 நள்ளிரவுடன் பதவிக்காலம் முடிவடையும் 340 உள்ளூராட்சி நிறுவனங்களின் எதிர்கால நடவடிக்கைகள் மற்றும் பராமரிப்பு குறித்து அரசாங்கம் கலந்துரையாடியுள்ளதாக பிரதமரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் ஆளுநர்களுடன் அலரி மாளிகையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

ஆளுநர்களான டிக்கிரி கொப்பேகடுவ (சப்ரகமுவ), வசந்த கர்ணகொட (வடமேற்கு), எம்.ஜே.எம். முசம்மில் (உவா), மஹிபால ஹேரத் (வடமத்திய), வில்லி கமகே (தெற்கு), லலித் யூ. கமகே (மத்திய), அநுராதா யஹம்பத் (கிழக்கு) ரொஷான் குணதிலக்க (மேற்கு), ஜீவன் தியாகராஜா (வடக்கு), பிரதமரின் செயலாளர் அநுர திஸாநாயக்க. பொது நிர்வாக செயலாளர் நீல் ஹபுஹின்ன மற்றும் பிரதமரின் சட்ட ஆலோசகர் கலாநிதி ஜயதிஸ்ஸ டி கோஸ்டா ஆகியோர் இந்த கலந்துரையாடலில் கலந்துகொண்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# கஞ்சா போதைப்பொருள் எரியூட்டி அழிக்கப்பட்டது!

வவுனியா, மார்ச் 17

வவுனியா மேல் நீதிமன்றில் முடிவடைந்த வழக்குகளின் சான்றுப்பொருளான கஞ்சா எரியூட்டி அழிக்கப்பட்டது.

வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் முன்னிலையில் நேற்று வவுனியா தாண்டிக்குளத்திலுள்ள வெற்றுக்காணியில் இவ்வாறு கஞ்சா எரியூட்டி அழிக்கப்பட்டது.

2021 மற்றும் 2022ஆம் ஆண்டுகளில் முடிவடைந்த வழக்குகளின் சான்றுப்பொருளாகக் காணப்பட்ட 100 கிலோவுக்கு அதிகமான கஞ்சா போதைப்பொருளே எரியூட்டி அழித்தொழிக்கப்பட்டது. (ஐ)

கல்வி tv CHANNEL-1

17.03.2023
வெள்ளிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

கல்வி tv CHANNEL - 2

17.03.2023
வெள்ளிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# இந்த நாடு குட்டிச் சுவராகுவதற்கு தேர்தல் மைய அரசியலே காரணம்!



காரைதீவில் முஷாரப் எம்.பி.

அம்பாறை, மார்ச் 17

**"துரதிர்ஷ்டவசமாக இலங்கையில் தேர்தல் மைய அரசியலை செய்து வருவதனால் இன்று நாடு குட்டிசு வராக மாறி இருக்கின்றது. இதிலிருந்து மீளவேண்டுமாக இருந்தால் நாங்கள் தேசத்தை மையமாக வைத்து தேச மைய அரசியலை செய்து அனைவரும் ஒன்றுபட்டு நாட்டை கட்டி எழுப்ப வேண்டும்."**

இவ்வாறு காரைதீவு பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் உரையாற்றிய அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்பு குழுத் தலைவருமான எஸ்.எம்.எம். முஷாரப் தெரிவித்தார் .

காரைதீவுப் பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் ஐந்து வருடங்களுக்கு பிற்பாடு நேற்று முன் தினம் புதன்கிழமை காரைதீவு பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன் வழிகாட்டலில் முஷரப் எம்.பி. தலைமையில் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது .

அச்சமயம், அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ண பிள்ளை ஜெயசிறில் , உதவி பிரதேச செயலாளர் எஸ். பார்த்திபன், உதவி திட்டமிடல் பணிப்பாளர் பி .இராஜதுரை உள்ளிட்டோர் கலந்து கொண்டார்கள் .

அங்கே பாராளுமன்ற உறுப்பினர் முஷரப் மேலும் தெரிவிக்கையில்- ஜனாதிபதியின் சிபார்சில் அம்பாறை மாவட்டத்தில் 6 பிரதேச செயலகங்களுக்கு என்னை ஒருங்கிணைப்பு குழுத் தலைவராக நியமித்துள்ளார்கள். என்னை பொறுத்தவரையில் அபிவிருத்திக்கு முன்னர் இனங்களிடையே பரஸ்பரம் ஒற்றுமை நிலவ வேண்டும். பிரச்சினைகளை விடுத்து தீர்வை வழங்கக்கூடிய எதையும் செய்ய வேண்டும்.

நாடு இன்று சொல்லொணா பின்னடைவை சந்தித்து இருக்கின்றது. பொருளாதார நெருக்கடியை சந்தித்து இருக்கின்றது. இது தனி நபர் வாழ்விலும் பாரிய பாதிப்பை அளித்து இருக்கின்றது. அரசியல் தேவைக்காக நாட்டை குட்டிச்சுவர் ஆக்கி இருக்கின்றார்கள். அதனால் வரிச்சுமை, பொருள் விலையேற்றம் என்பன தலைவிரித்து ஆடுகின்றன.

சகல இனங்களும் தேச அபிமானத்துடன் வாழ்ந்தால் இந்த பிரச்னையிலிருந்து மீளலாம். தேச மைய அரசியல் வேண்டும். தேர்தலுக்காக இனவாதத்தை பேசி அரசியல் செய்வதால் நீண்ட காலமாக பிரச்னைகள் தீர்க்கப்படாமல் உள்ளன.

பைத்தியக்காரன் கத்துகின் றான் என்பதற்காக அதற்கு சிகிச்சை செய்கின்ற வைத்தியரும் கத்த முடியாது .ஆனால் சில இடங்களில் பைத்தியக்காரனும் கத்துகிறான். வைத்தியரும் கத்துகிறார்.

எனவே நாங்கள் பிரச்னையை பேசிப் பேசிக் காலத்தை கடத்தாமல் தீர்வை நோக்கிக் கூட்டங்களை நடத்த வேண்டும். கூட்டத்தில் அழைப்பு விடுக்கின்ற அனைத்து அதிகாரிகளும் கலந்து கொள்ளவேண்டும். கலந்து கொள்ளாதவர்களுக்கு ஒழுங்காற்று நடவடிக்கை எடுக்கவேண்டும்-என்றார்.

கூட்டத்தில் திணைக்களத் தலைவர்கள், அமைப்பின் தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

பல பிரச்னைகளுக்கு தீர்வு காணப்பட்டன.

(அ)

# கல்முனை ஆசிரியர்கள் கவனயீர்ப்பு போராட்டம்



அம்பாறை, மார்ச் 17

கல்முனை பிரதேச ஆசிரியர்கள் தொழிற்சங்கக் கூட்டமைப்பு நேற்று முன் தினம் கல்முனை தனியார் பஸ் தரிப்பு நிலையத்துக்கு முன் எதிர்ப்பில் ஈடுபட்டனர்.

நாடு தழுவிய ரீதியில் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்புக்களால் நேற்று முன்தினம் புதன்கிழமை போராட்டம் முன்னெக்கப்பட்டது. இதனால் கல்முனை கல்வி வலயப் பாடசாலைகள் மாணவர்கள், ஆசிரியர்கள் வரவின்மையால் வெறிச்சோடிக் காணப்பட்டன.

அத்துடன், ஆசிரியர்கள், மாணவர்கள் வரவின்மையால், மூன்றாம் தவணைப் பரீட்சையும் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெறாமல் மற்று மொரு தினத்திற்கு மாற்றப்பட்டது.

இந்நிலையில் கல்முனை பிரதேச ஆசிரியர்கள் தொழிற்சங்கக் கூட்டமைப்பினர் நேற்று முன்தினம் கல்முனை தனியார் பஸ் தரிப்பு நிலையத்துக்கு முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

(அ)

# சட்டவிரோதமாக வெளிநாடு செல்லமுயன்ற 17 பேர் கைது

மட்டக்களப்பு, மார்ச் 17

சட்டவிரோதமான முறையில், படகொன்றின் மூலமாக வெளிநாட்டுக்குச் செல்லமுயன்றனர் மற்றும் அவர்களுக்கு உதவிகளை புரிந்தனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் 17 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பில் கடல் ஊடாக செல்வதற்கு வீடு ஒன்றில் தங்கியிருந்த முல்லைத்தீவுப் பிரதேசத்தைச் சேர்ந்த 3 சிறுவர்கள், 5 பெண்கள், 8 ஆண் கள் மற்றும் அவர்களுக்கு உதவி புரிந்துவந்த ஒருவர் உட்பட 17 பேரை நேற்று முன் தினம் புதன்கிழமை இரவு மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினர் கைது செய்து ஒப்படைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினருக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து கொக்குவில் பொலிஸ் பிரிவிலுள்ள சுவிஸ் கிராமத்திலுள்ள வீடு ஒன்றை மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவினர் சுற்றிவளைத்தனர்.

சட்டவிரோத ஆள்கடத்தல் செய்யும் ஒருவர் முல்லைத்தீவு பகுதியைச் சேர்ந்த 16 பேரிடம் பணத்தை வாங்கிக்கொண்டு மட்டக்களப்பு கடலில் இருந்து படகு மூலம் அவுஸ்திரேலியாவுக்கு அனுப்புவதாக தெரிவித்து அவர்களை அழைத்து வந்து மட்டக்களப்பு சுவிஸ் கிராமத்தில் வீடு ஒன்றை வாடகைக்கு பெற்று அங்கு கடந்த ஒரு மாத காலமாக தங்க வைத்திருந்தமை பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

இதில் 3 சிறுவர்கள், 3 கர்ப்பிணிப் பெண்கள் உட்பட 5 பெண்கள், 8 ஆண்கள் மற்றும் அவர்களுக்கு வீடு வாடகைக்கு பெற்றுக் கொடுத்து உதவி புரிந்த ஒருவர் உட்பட 15 பேரை கைது செய்ததுடன், படகு மூலம் செல்வதற்காக கொள்வனவு செய்து வைத்திருந்த சமபோஷா, பிஸ்கற் பைக்கெற்கள், சீனி மற்றும் ஆடைகள் என்பவற்றையும் குற்ற விசாரணைப்பிரிவினர் மீட்டுள்ளனர்.

(அ)

# கிழக்கு விவசாய பணிப்பாளராக சாலிஹ் அபுல் கலீஸ் நியமனம்

அம்பாறை, மார்ச் 17

அம்பாறை மாவட்ட விவசாய பணிப்பாளர் சாலிஹ் அபுல் கலீஸ் கடந்த 15 ஆம் திகதி தொடக்கம் கிழக்கு மாகாண விவசாயப் பணிப்பாளராக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

மருதமுனை அல்ஹம்றா மகாவித்தியாலயம், கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி போன்றவற்றின் பழைய மாணவரான அபுல் கலீஸ் அம்பாறை மாவட்டத்தின் விவசாய விரிவாக்கல் பகுதியின் உதவி மாவட்ட பணிப்பாளராக 1992 இல் முதல் நியமனம் பெற்றுக் கொண்டார். 1996 இல் மகா இலுப்பள்ளம விவசாய ஆராய்ச்சி, நிலையத்தின் வயற்பயிர்கள் அபிவிருத்தி ஆராய்ச்சி நிறுவன பிரிவின் உதவிப் பணிப்பாளராகவும் பணி செய்தார். பின்னர் 1997இல் மீண்டும் அம்பாறை மாவட்டத்திற்கு விவசாய உதவிப் பணிப்பாளராக மாற்றம் பெற்றார். 2009 ஆம் ஆண்டு பிரதி விவசாய பணிப்பாளராக பதவி உயர்வு பெற்று கண்டி, ஹசலக பிரிவில் 2 வருடங்கள் கடமையாற்றினார்.



பின்னர் அம்பாறை மாவட்டத்திற்கு அதே பதவிக்கு மாற்றம் பெற்றார். பின்னர் 2017ஆம் ஆண்டு அம்பாறை மாவட்டத்திற்கான விவசாய பணிப்பாளராக பதவி உயர்வு பெற்ற அபுல் கலீஸ் , 2020 -21 காலப் பகுதியில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான பதில் விவசாய பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார். அத்துடன் குண்டசாலை விவசாய கல்லூரியின் வருகை தரு விரிவுரையாளராகவும் குறிப்பிட்ட காலம் கடமையாற்றியுள்ளார்.

(அ)

# ஓதுவார்கள் ஒன்றுகூடல்

அம்பாறை, மார்ச் 17

அம்பாறை மாவட்டத்தில் உள்ள திருமுறைகளை ஓதும் ஒது வார்களை ஒன்றிணைப்பதுடன் அவர்கள் தொடர்பான தகவல்களை திரட்டுதல் அவர்களுக்கான அங்கீகாரம், ஆற்றுப்படுத் தும் வகையில் இவ் நிகழ்வானது காரைதீவு சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்த மணி மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

முதற்கட்டமாக ஓதுவார்களுக்கான திருவாசகம் நூல் வழங்கப்பட்ட இந்நிகழ்வானது காரைதீவு பிரதேச செயலாளர் சி.ஜெகராஜன் தலைமையில் இடம் பெற்றது. ஆன்மீக அதிதியாக நாவிதன்வெளி ஸ்ரீமுருகன் ஆலய பிரதமகுரு சிவசிறி சுபாஷ்கர சர்மா, சிறப்பு அதிதிகளாக உதவி கல்விப்பணிப்பிளர் வி.ரி சகாதேவ ராஜா, இராவணா அறக்கட்டளையின் தலைவர் நா.சனாதனன், சைவப்புலவர் யோ,கஜேந்திரா, புண்ணியமலர் அம்மா, மற்றும் இந்துகலாசார உத்தியோ கத்தர்கள் ஆகியோர் கலந்து கொண் டனர்.

பங்கு பற்றிய ஓதுவார்களுக்கான திருவாசக நூலினை இந்து கலாச்சார உத்தியோகத்தர் கு. ஜெயராஜின் ஏற்பாட்டில் சிவன் தொலைகாட்சியின் சிவன் அடியார் மூலமாக வழங்கப்பட் டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# களுவாஞ்சிக்குடியில் தடுப்பூசி!

மட்டக்களப்பு, மார்ச் 17

மட்டக்களப்பு களுவாஞ்சி குடிபிராந்திய சுகாதார வைத் திய அதிகாரி பிரிவில் பாடசாலை மாணவர்களுக்கான கருப்பை கழுத்துப் புற்றுநோயை தடுப்பதற்கான தடுப்பூசி மற்றும் ஏற்பு வலி, தொண்டைக் கரப்பான் நோய்களை தடுப்பதற்கான தடுப்பூசிகள் ஏற்றப்படுகின்றன.

தடுப்பூசி ஏற்றும் செயல்திட்டம் சுகாதார வைத்திய அதிகாரி ஏ.உதயசூரியவின் வழிகாட்ட லில் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ்.யோகேஸ்வரன் ஒழுங்கமைப்பில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

பட்டிருப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலயத்தில் தரம்-6 இல் கல்வி கற்கும் மாணவிகளுக்கு கருப்பை கழுத்து புற்று நோய் தடுப்பூசி ஏற்றப்பட்டது.

அத்துடன் ஏ.ரி.டி தடுப்பூசியும் ஏற்றப்பட்டன. பொதுச்சு காதாரபரிசோதகர் கஜானன் உட்பட குடும்பநல உத்தியோகத்தர்கள் தடுப்பூசியேற்றும் செயற்றிட்டத்தில் இணைந்திருந்தனர்.

(அ)

# கிரெடிட் சூயிஸ் வங்கியும் சரிவு!

## ஐரோப்பியப் பங்குச் சந்தைகள் ஈடாட்டம்




பாரிஸ், மார்ச் 17

**அமெரிக்காவின் இரண்டு வங்கிகள் திடீரெனச் சரிவைச் சந்தித்ததால் எழுந்த நிதி நிலைப் பதற்றம் ஐரோப்பிய வங்கிகள் மத்தியில் தாக்கத்தைத் தோற்றுவித்துள்ளது.**

**அதனால் ஐரோப்பிய முதலீட்டாளர்கள் மற்றும் நிதிச் சந்தைகள் மத்தியில் கவலை எழுந்துள்ளது.**

இந்த நிலையில் - சுவிஸ் நாட்டின் முக்கிய பெரிய வங்கியாகிய கிரெடிட் சூயிஸின் (Credit Suisse) பங்கு நேற்று முன் தினம் புதன் கிழமை மிக மோசமான வீழ்ச்சியைச் சந்தித்தது. சுமார் 30 வீதம் வரை அது சரிந்தது. அதன் எதிரொலியாக ஐரோப்பியப் பங்குச் சந்தைகள் உடனேயே வீழ்ச்சியடைந்தன.

பாரிஸ் பங்குச் சந்தை 3.25% வீதமும் லண்டன் 2.34%வீதமும், பிராங்பேர்ட் 2.61% வீதமும் மிலான் 3.61% வீதமும் வீழ்ச்சியடைந்தன என்று அறிவிக்கப்படுகிறது.

கிரெடிட் சூயிஸ் வங்கி அதன் மூலதனத்தைப் பெருக்குவதற்கு இனிமேலும் தொடர்ந்து உதவப் போவதில்லை என்று அந்த வங்கியின் பிரதான முதல் பங்குதாரராகிய சவுதி தேசிய வங்கி நேற்று முன் தினம் திடீரென அறிவித்ததை அடுத்தே சுவிஸ் வங்கி பெரும் வீழ்ச்சியைச் சந்திக்க நேர்ந்தது. அதுவே ஐரோப்பிய வங்கிகள் மத்தியில் பதற்றத்தை உருவாக்கிவிட்டிருக்கிறது.

கிரெடிட் சூயிஸின் மூலதனத் தளம்பல் பிரான்ஸின் இரண்டு முக்கிய வங்கிகளையும் பாதித்திருக்கிறது.

பிரான்ஸின் பிரதமர் எலிசபெத் போர்னிடம் இது குறித்து நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பப்பட்டது. "இந்த விவகாரம் முழுக்க முழுக்க சுவிஸ் நாட்டு அதிகாரிகளின் பொறுப்புக்குரியது. அவர்களாலே தீர்க்கப்படவேண்டிய பிரச்னை இது" என்று அவர் அங்கு பதிலளித்தார்.

ஐரோப்பாவின் மிகப் பலவீனமான வங்கியாகக் கருதப்படுகின்ற சுவிஸ் நாட்டின் "கிரெடிட் சூயிஸ்" வங்கி வங்குரோத்தைச் சந்தித்தால் அது ஐரோப்பிய முதலீட்டுச் சந்தையில் பெரும் அதிர்வை ஏற்படுத்தும்.

சுவிஸின் மிகப் பழைய பாரம்பரியம் மிக்க இந்த வங்கி அண்மைக் காலங்களில் இடம்பெற்ற பெரும் ஊழல் மற்றும் நிதி முறைகேடுகளால் நிதிப் பலவீனத்தைச் சந்தித்துள்ளது.

அமெரிக்காவின் "சிலிக்கென் வாலி" வங்கி கடந்த வார இறுதியில் திடீரென வங்குரோத்தடைந்தது. இப்போது "கிரெடிட் சூயிஸ்"வங்கி ஆட்டம் காணத் தொடங்கியுள்ளது. இவை உலகளாவிய ஒரு நிதி நெருக்கடியின் அறிகுறியா அல்லது தனித் தனியான வங்கிகளது நிதி விவகாரங்களா என்பது இன்னமும் தெளிவாகத் தெரியவில்லை. (அ)

# துருக்கியின் பல பகுதிகளில் திடீரென வெள்ளப் பெருக்கு!



அங்காரா, மார்ச் 17

கடுமையான நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட துருக்கியின் பல பகுதிகள் திடீர் வெள்ளத்தால் தற்போது கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

வெள்ளம் காரணமாக 14 பேர் உயிரிழந்துள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நிலநடுக்கத்தால் வீடுகளை இழந்து கூடாரங்களிலும் தற்காலிக கொள்கலன் வீடுகளிலும் தங்கியிருந்த மக்கள் வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் துருக்கியில் ஏற்பட்ட 7.8 ரிச்டர் உள்ளிட்ட தொடர் நிலநடுக்கங்களில் சுமார் 48,000 பேர் உயிரிழந்துள்ளனர். (அ)

# மற்றொரு ஏவுகணையை ஏவியுள்ளது வடகொரியா!

பியொங்யாங், மார்ச் 17

வடகொரியா மற்றொரு ஏவுகணையை சோதனை செய்துள்ளது.

தென் கொரியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான இராணுவப் பயிற்சியின் போது இந்த ஏவுகணைச் சோதனை நடத்தப்பட்டதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த இராணுவ பயிற்சிகளை 10 நாட்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

சில நாட்களுக்கு முன்னர், வடகொரியா இரண்டு குறுகிய தூர ஏவுகணைகளை சோதனை செய்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# ரஷ்யாவுக்கு உளவு பார்த்ததாக போலந்தில் குழுவொன்று கைது!

வார்ஸோ, மார்ச் 17

ரஷ்யாவுக்காக உளவு பார்த்ததாக சந்தேகத்தின் பேரில் வெளிநாட்டு பிரஜைகள் குழுவொன்று கைது செய்யப்பட்டுள்ளதாக போலந்து அரசாங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்

உக்ரைனுக்கு உதவிகளை வழங்கப் பயன்படுத்தப்படும் போக்குவரத்து உள்கட்டமைப்பை ஒளிப்பதிவு செய்ய ரகசிய கேமராக்களை பொருத்தியதாக சந்தேகத்தின் பேரில் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

உக்ரைன் போருக்குப் பிறகு ரஷ்யாவிற்கும் மேற்கு நாடுகளுக்கும் இடையே பல தசாப்தங்களாக நீடித்த உளவு மோதல் தீவிரமடைந்துள்ளது.

போலந்து உக்ரைனின் வலுவான நட்பு நாடுகளில் ஒன்றாகும் மற்றும் அதன் பாதுகாப்புப் படையினர் கடந்த பெப்ரவரி மாதம் படையெடுப்புக்குப் பிறகு, ரஷ்யாவுக்கு உளவு பார்த்ததாக சந்தேகத்தின் பேரில் பலரைக் கைது செய்துள்ளனர். (அ)

# ரஷ்யா- ஈரானுடன் கூட்டு சேரும் சீனா!

## அமெரிக்காவுக்கு எதிரான புதிய திட்டமா?



பீஜிங், மார்ச் 17

சீன பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில், ஓமன் வளைகுடா பகுதியில் இந்த வாரம், அமெரிக்காவுக்கு எதிரான நிலைப்பாடு கொண்ட ரஷ்யா, ஈரான் மற்றும் சீனா ஆகிய நாடுகள் இணைந்து அடுத்த வாரம் கூட்டு கடல் பயிற்சியில் ஈடுபட திட்டமிட்டுள்ளது என்று தெரிவித்துள்ளது.

இந்த பாதுகாப்பு பிணைப்பு - 2023 கடற்பயிற் சியில் பிற நாடுகளும் பங்கேற்க உள்ளன என அந்த அறிக்கை தெரிவித்துள்ளது.

பெர்சியன் வளைகுடாவின் முகப்பு பகுதியில் உள்ள கடல் பகுதிகளில் ஈரான், பாகிஸ்தான், ஓமன் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய அனைத்து நாடுகளும் கடற்கரைகளை கொண்டுள்ளன.

இந்த கடற்பயிற்சியானது, பங்கெடுக்கும் நாடுகளின் கடற்படையினரிடையே நடைமுறை ஒத்துழைப்பை ஆழப்படுத்த உதவும். அதனுடன் மண்டல அமைதி மற்றும் ஸ்திர தன்மைக்கு ஏற்ற நேர்மறையான ஆற்றலையும் ஊட்டும் என சீன பாதுகாப்பு அமைச்சின் அறிக்கை தெரிவிக்கின்றது.

இந்த 3 நாடுகளும் அமெரிக்காவுக்கு எதிரான நிலைப்பாட்டை கொண்டுள்ளன. உக்ரைனுக்கு எதிராக போரால் ரஷ்யாவுக்கு எதிராக அமெரிக்கா, அதன் கூட்டணி நாடுகள் கண்டனம் தெரிவித்து வருகின்றன. உக்ரைனுக்கு ஆயுத உதவியும் செய்து வருகின்றன.

ரஷ்யாவுக்கு எதிரான விமர்சனங்களை வெளிப்படுத்த சீனா மறுத்து வருகின்றது. இந்த விவகாரங்கள் உள்பட சீனாவுக்கு எதிராக பல்வேறு விடயங்களில், அமெரிக்கா எதிரான நிலைப்பாட்டை கொண்டுள்ளது.

ரஷ்யாவுக்கு உதவ கூடாது என சீனாவுக்கு எச்சரிக்கையும் விடுத்துள்ளது. இதேபோன்று, ஈரான் நாடு உருவானது முதல் அமெரிக்காவுக்கு எதிரான போக்கை கொண்டுள்ளன.

அமெரிக்க தூதர்களை பிணை கைதிகளாக பிடித்து வைத்த சம்பவங்களும் நடந்துள்ளன. இந்நிலையில், இந்த கூட்டு கடற்பயிற்சி நடைபெற உள்ளது.

கடந்த ஆண்டும், 2019ஆம் ஆண்டிலும் இதே போன்ற தொரு பயிற்சியை 3 நாடுகளும் மேற்கொண் டுள்ளன.

அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளால் எதிர்க்கப்படுகிற நாடுகளுடன் இராணுவ மற்றும் அரசியல் ரீதியிலான தொடர்புகளை சீனா மேற்கொண்டு வருவது அதிகரித்துள்ளமை தெரிகின்றது. (அ)

# கருங்கடலில் விழுந்த அமெ. ஆளில்லா விமானத்தின் எச்சங்களைக் கண்டுபிடிக்க தீவிரம் காட்டும் ரஷ்யா!

மொஸ்கோ, மார்ச் 17

கருங்கடலில் விழுந்து நொறுங்கிய அமெரிக்க ஆளில்லா விமானத்தின் எச்சங்களை கண்டுபிடிக்க முயற்சிப்பதாக, ரஷ்யா தெரிவித்துள்ளது.

குறித்த எச்சங்களை கண்டுபிடிக்க முடியுமா இல்லையா என்பது தனக்கு தெரியவில்லை என்றாலும் அதற்கான முயற்சிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளதாக, ரஷ்ய பாதுகாப்பு சபையின் செயலாளர் நிகோலாய் பட்ருஷேவ் தெரிவித்துள்ளார்.

மேலும், கருங்கடலில் ஆளில்லா விமானம் இருப்பது அமெரிக்கா நேரடியாக போரில் ஈடுபட்டது என்பதை உறுதிப்படுத்துவதாகவும் அவர் கூறினார்.

அமெரிக்காவும் விமானத்தைத் தேடி வருவதாகவும் சில வேளை ரஷ்யா ஆளில்லா விமானத்தின் எச்சங்களை கண்டுபிடித்தால், பயனுள்ள நுண்ணறிவு பறிபோய்விடும் அபாயம் இருப்பதாகவும் அமெரிக்க மூத்த அதிகாரி ஜோன் கிர்பி தெரிவித்தார்.

ஆளில்லா விமானம் விழுந்த இடத்தில் தண்ணீர் 4,000 அடி முதல் 5,000 அடி (1,200 மீ முதல் 1,500 மீ) ஆழம் இருப்பதாகவும் ஆகவே, ஆளில்லா விமானத்தை கண்டுபிடிப்பது சவாலானது எனவும் அவர் குறிப்பிட்டார்.



கடந்த செவ்வாய்க்கிழமை காலை அமெரிக்காவின் எம். க்யு -09 ரீப்பர் ஆளில்லா விமானம், கருங்கடல் பகுதியில் விழுந்து நொருங்கியது.

இந்த ஆளில்லா விமானம் விழுந்து நொருங்குவதற்கு முன்னர், ரஷ்யாவின் இரண்டு எஸ். யு-27 போர் விமானங்கள், மேலும் பின்னுமாக அமெரிக்க ஆளில்லா விமானத்தை சுமார் 30-40 நிமிடங்கள் பின்தொடர்ந்து, ஆளில்லா விமானம் பறக்க முடியாத அளவு மற்றும் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு எரிபொருளைக் கொட்டியதாகவும் இதனால், குறித்த ஆளில்லா விமானம் கட்டுப்பாட்டை இழந்து கருங்கடலில் விழுந்து நொருங்கியதாகவும் அமெரிக்க ராணுவ அதிகாரிகள் குற்றஞ்சாட்டினர். ஆனால், இந்த குற்றச்சாட்டுகளை ரஷ்யா முழுமையாக மறுத்துள்ளது. (அ)




# டில்லி கப்பிட்டல்ஸின் தலைராக வோர்ணர்!

புதுடில்லி, மார்ச் 17

ஐ. பி. எல். 2023 போட்டிக்கான புதிய அணித் தலைவரை அறிவித்துள்ளது டில்லி கப்பிட்டல்ஸ் அணி நிர்வாகம். மேலும், அணியின் இயக்குநராக இந்திய கிரிக்கெட் சபையின் முன்னாள் தலைவரான சௌரவ் கங்குலி நியமிக்கப்பட்டுள்ளார்.

கார் விபத்தில் காயமடைந்ததால் டில்லி கப்பிட்டல்ஸ் அணியின் தலைவரான ரிஷப் பந்த் இந்த ஆண்டு ஐ. பி. எல். தொடரில் விளையாட முடியாத நிலை ஏற்பட்டது. இதையடுத்து புதிய தலைவரை நியமிக்கும் நிலை ஏற்பட்டது.

இதையடுத்து, டில்லி கப்பிட்டல்ஸ் அணியின் புதிய தலைவராக அவுஸ்திரேலியாவின் துடுப்பாட்ட வீரர் டேவிட் வோர்ணர் நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த வருடம் உப அணித் தலைவராக இருந்த அக்ஷர் பட்டேல் இந்த ஆண்டும் அதே பதவியில் தொடர்கிறார்.

2016இல் சன்ரைசர்ஸ் அணி, டேவிட் வோர்ணர் தலைமையில் ஐ. பி. எல். கிண்ணத்தை வென்றது. கடந்த வருட ஐ. பி. எல். போட்டியில் 5 அரைச் சதங்களுடன் 432 ஓட்டங்கள் வோர்ணர் எடுத்திருந்தார். (ஐ)

# இந்தியன் வெல்ஸ் ரென்னிஸ் ஸ்வியாரெக் இலகு வெற்றி!

கலிபோர்னியா, மார்ச் 17

பிரிட்டனின் இளம் வீராங்கனை எம்மாவை முதல்நிலை வீராங்கனையான இகா ஸ்வியாரெக் இலகுவாக தோற்கடித்தார்.

அமெரிக்காவில் நடைபெறும் இந்தியன்ஸ் வெல்ஸ் ரென்னிஸ் தொடர் நடக்கிறது. இதில்,

உலகின் முதல்நிலை வீராங்கனையான போலந்தின் இகா ஸ்வியாரெக் 6-3, 6-1 என்ற செற்களில் பிரிட்டனின் இளம் வீராங்கனையான எம்மா ரடு கானுவை எளிதாக வெளி யேற்றினார்.

ஸ்வியாரெக் தனது காலிறுதியில் ருமேனியாவின் சொரானா சிர்ஸ்டியுடன் மோதுகிறார். முன்னதாக சிர்ஸ்டி, 6-4, 4-6, 7-5 என்ற செற்களில், 5ஆம் இடத்திலிருந்த பிரான்ஸின் கரோலின் கார்சியாவை தோற்கடித்தார்.



போட்டித்தரவரிசையில் 3-ஆம் இடத்திலிருந்த அமெரிக்காவின் ஜெஸிகா பெகுலா 2-6, 6-3, 6-7 (11/13) என்ற செற்களில், 15ஆவது இடத்திலிருந்த செக் குடியரசின் பெட்ரா குவித்தோவாவிடம் அதிர்ச்சி தோல்வி கண்டார். (ஐ)

## மகளிர் பிறீமியர் லீக்

# முதல் வெற்றியை ருசித்தது பெங்களூர்!




பெங்களூர், மார்ச் 17

மகளிர் ஐ. பி. எல். தொடரின் 13ஆவது ஆட்டத்தில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் உத்தரபிரதேச வோரியர்ஸ் அணியை வீழ்த்தியது.

போட்டி தொடங்கி 6 போட்டிகளில் விளையாடியிருக்கும் பெங்களூருக்கு இதுவே முதல் வெற்றியாகும். அந்த அணியின் தொடர் தோல்விக்கு இந்த வெற்றி ஆறுதலாக அமைந்தது. உத்தர பிரதேச அணிக்கு 5ஆவது ஆட்டத்தில் இது 3ஆவது தோல்வி.

இந்தப் போட்டியில் முத லில் ஆடிய உத்தர பிரதேச 19.3 ஓவர்களில் 135 ஓட் டங்களுக்கு 10 விக்கெட்களை யும் இழந்தது. அடுத்து ஆடிய பெங்களூர் 18 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 136 ஓட்டங்கள் சேர்த்து வென்றது.

முன்னதாக, நாணயச் சுழற்சியில் வென்ற பெங்களூர் பந்துவீச்சை தெரிவு செய்தது. உத்தரபிரதேசம் அதிகபட்சமாக கிரேஸ் ஹாரிஸ் 5 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 46 ஓட்டங்கள் விளாசினார். கிரண் நவ்கிரே 2 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 22, தீப்தி சர்மா 22 ஓட்டங்கள் சேர்த்தனர். ஏனைய வீரர்கள் பெரிதாக சோபிக்க வில்லை.

பெங்களூரின் பந்துவீச்சில் எலிஸ் பெரி 3, சோபி டிவைன், ஷோபனா ஆஷா ஆகியோர் தலா 2 விக்கெட்களை வீழ்த்தினர்.

பின்னர் ஆடிய பெங்களூர் அணியில் சோபி டிவைன் 14, அணித் தலைவி ஸ்மிருதி மந்தனா 0, எலிஸ் பெரி 10 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர். ஹீதர் நைட் 5 பௌண்ட்ரிகளுடன் 24, கனிகா அஹூஜா 8 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 46 ஓட்டங்கள் சேர்த்து வெற்றிக்கு வித்திட்டனர். (ஐ)




# ஐ. பி. எல். தொடரிலிருந்து விலகினார் வில் ஜாக்ஸ்!

பெங்களூர், மார்ச் 17

நடக்கவுள்ள ஐ. பி. எல். தொடரில் பெங்களூர் வீரர் வில் ஜாக்ஸ் விளையாட மாட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ. பி. எல். 2023 தொடருக்காக கடந்த டிசெம்பரில் நடந்த ஏலத்தில் இங்கிலாந்தை சேர்ந்த சகலதுறை வீரரான வில் ஜாக்ஸ் என்பவரை 3.2 கோடி ரூபாயில் பெங்களூர் அணி வாங்கியது.

ஏற்கனவே, பெங்களூர் அணியில் கிளென் மக்ஸ்வெல் இருக்கும் நிலையில், நடுவரிசைக்கு கூடுதல் பலத்தை சேர்க்கும் விதமாக வில் ஜாக்ஸ் வாங்கப்பட்டார்.

ஐ. பி. எல். தொடர் எதிர்வரும் 31ஆம் திகதி ஆரம்பமாகிறது. இந்த நிலையில், பங்களாதேஷுக்கு எதிராக நடந்த ஒருநாள் போட்டியில் விளையாடிய வில் ஜாக்ஸ் காயமடைந்தார். களத்தடுப்பில் ஈடுபட்டிருந்தபோது அவருக்கு காயம் ஏற்பட்டது.

காயத்தை பரிசோதித்த மருத்துவர்கள் அவரை ஓய்வில் இருக்குமாறு அறிவுறுத்தினர். இதையடுத்து அவர் ஐ. பி. எல். தொடரில் பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அவருக்கு பதிலாக நியூசிலாந்து அணி வீரர் மைக்கேல் பிரஸ்வெல்லை அணியில் சேர்ப்பதற்காக பேச்சு நடக்கிறது.

# ஐ. சி. சி. தரவரிசை; மத்தியூஸ் முன்னேற்றம்!



நியூசிலாந்து அணியுடனான முதலாவது டெஸ்ட் போட்டியில் சதம் அடித்து அசத்திய இலங்கையின் அஞ்சலோ மத்தியூஸ் ஐ.சி.சி.யின் டெஸ்ட் துடுப்பாட்ட வரிசையில் 3 இடங்கள் முன்னேறி 17ஆவது இடத்தை பிடித்துள்ளார்.

இந்தப் போட்டியின் முதல் இன்னிங்ஸில் அரைச் சதம் (89) அடித்த குசல் மெண்டிஸ் 2 இடங்கள் முன்னேறி 49 ஆவது இடத்தில் உள்ளார்.

ஆனால், இலங்கை அணித்தலைவரான திமுத் கருணாரட்ன 9ஆவது இடத்திலிருந்து 2 இடங்கள் சரிந்து 11ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டார். தினேஷ் சந்திமால் 3 இடங்கள் சரிந்து 18ஆவது இடத்திலுள்ளார்.

இதேவேளை,

ஐ.சி.சியின் டெஸ்ட் பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில் பிரபாத் ஜயசூரிய 4 இடங்கள் முன்னேறி 31 ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். இவரைத் தவிர வேறு எந்த இலங்கை பந்துவீச்சாளர்களும் இவருக்கு முன்னரான இடத்தில் இல்லை. இந்தியாவின் அஸ்வின் முதலிடத்தில் தொடர்கிறார்.

இதேசமயம், வேகப்பந்து வீச்சாளர்களான அசித்த பெர்னாண்டோ 13 இடங்கள் முன்னேறியும் , லஹிரு குமார 4 இடங்கள் முன்னேறி முறையே 43, 47 ஆகிய இடங்களில் உள்ளனர். (ஐ)

# போராட்டங்கள் ஊடாக அரசை வீழ்த்த முடியாது

## மொட்டு கட்சி இறுமாப்பு

**கொழும்பு, மார்ச் 17**

**போராட்டங்களினால் அரசாங்கத்தை வீழ்த்த முடியாது என சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.**



கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- சகல போராட்டங்களையும் எதிர்கொள்ளத் தயாராக உள்ளோம்.

பொருளாதார மீட்சிக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுத்த தீர்மானங்களினால் எவ்வித மாற்றங்களும் ஏற்படாமல் இருந்தால் தொழிற்சங்கத்தினர் போராட்டங்களில் ஈடுபடுவது நியாயமானது.

காலி முகத்திடல் போராட்டக்களத்தில் போராடி நாட்டை பாரிய நெருக்கடிக்குள்ளாக்கிய தரப்பினர் தான் தற்போது தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள்.

தொழிற்சங்கத்தினர் நாட்டுக்கு எதிராக செயற்படுகிறார்கள். நாட்டு மக்கள் இவர்களை புறக்கணிக்கவேண்டும் - என்றார். (அ)

# ஜனநாயகத்தைப் பாதுகாக்க பரந்துபட்ட கூட்டணி தேவை!

## வலியுறுத்துகின்றார் சரித ஹேரத்

கொழும்பு, மார்ச் 17

ஜனநாயகத்தை பாதுகாக்க அனைத்துக் கட்சிகளும் இணைந்து பரந்தப்பட்ட கூட்டணியை அமைக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் தெரிவித்தார்.

சுதந்திர மக்கள் கூட்டணி அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- தேர்தலை ஒத்திவைத்து, மக்களை அடக்கி ஆளலாம் என நினைத்த ஆட்சியாளர்கள் படுதோல்வி அடைந்ததே இந்நாட்டு வரலாறு.



அவ்வாறான சந்தர்ப்பங்களில் எதிரணிகளுக்கே மக்கள் மூன்றிலிரண்டு பெரும்பான்மை ஆதரவை வழங்கியுள்ளனர்.

தற்போதைய அரசு தேர்தலை நடத்தாது என்றே எண்ண தோன்றுகிறது.

எனவே, எதிரணிகள் தம்மிடையிலான விமர்சனங்களை விடுத்து, ஜனநாயகத்தை பாதுகாக்க பரந்தப்பட்ட கூட்டணியாக ஒன்றுபடவேண்டும் - என்றார். (அ)

# இரு தரப்பு உறவை வலுப்படுத்த இலங்கை-இங்கிலாந்து இணக்கம்

கொழும்பு, மார்ச் 17

இரு நாடுகளுக்குமிடையிலான நீண்டகால இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் வகையில் செயற்படுவதற்கு இலங்கையும் பிரித்தானியாவும் இணக்கம் தெரிவித்துள்ளன.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, வெளிவிவகார, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி விவகாரங்களுக்கான பிரிட்டன் இராஜாங்கச் செயலாளரை லண்டனில் சந்தித்து பேசியபோது இது தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

இலங்கைக்கும் பிரித்தானியாவுக்கும் இடையிலான நீண்டகால இருதரப்பு உறவின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய பேச்சுவார்த்தை மற்றும் பங்காளித்துவத்தை வலுப்படுத்துவதற்கும் இரு தரப்பினரும் இச்சந்திப்பின்போது இணக்கம் தெரிவித்ததாக அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

22ஆவது கொமன்வெல்த் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் பங்கேற்பதற்காக அலி சப்ரி லண்டன் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அமைச்சர்களின் வெளிநாட்டு பயண கொடுப்பனவுகளை குறைக்கும் அரசு!

கொழும்பு, மார்ச் 17

அமைச்சர்கள் உட்பட அனைத்து மக்கள் பிரதிநிதிகளும் உத்தியோகபூர்வ பணிகளுக்காக வெளிநாடு செல்லும் போது அவர்களுக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த அனைத்துக் கொடுப்பனவுகளையும் குறைக்க நிதியமைச்சு தீர்மானித்துள்ளது.

அமைச்சர்கள், மாகாண ஆளுநர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் தவிசாளர்கள், மாநகர சபை மேயர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தலைவர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகளே இவ்வாறு குறைக்கப்படவுள்ளன.

எதிர்வரும் 20ஆம் திகதி முதல் செலவுகளைக் குறைக்கும் முடிவு அமுலுக்கு வரும் என நிதி அமைச்சக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கமைய, படிப்பு, பயிற்சி, கலந்துரையாடல்கள், மாநாடுகள் போன்ற திறன் மேம்பாடு தொடர்பான வெளிநாட்டுப் பயணங்களின் போது, தினசரி 40 அமெரிக்க டொலர்களில் இருந்து அதிகபட்சமாக 30 நாட்களுக்கு வழங்கப்படும் சாதாரண கொடுப்பனவை 25 அமெரிக்க டொலர்களாகக் குறைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், அரசு சார்பில் உத்தியோகபூர்வ பணிகளுக்காகவோ அல்லது வெளிநாட்டு விவகாரங்களுக்காகவோ வெளிநாடு செல்லும்போது நாளொன்றுக்கு 75 அமெரிக்க டொலர்கள் வீதம் அதிகபட்சமாக 15 நாட்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவை குறைத்து 10 நாட்களுக்குள் மட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், உத்தியோகபூர்வ அரசாங்க விஜயத்தின்போது தூதுக்குழுவை வழிநடத்தும் அமைச்சர் அல்லது அமைச்சின் செயலாளரின் கோரிக்கைக்கு உரித்தான 750 அமெரிக்க டொலர் உபசரிப்பு கொடுப்பனவை முற்றாக இரத்து செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# திருட்டுகளுடன் தொடர்புடைய மூவர் யாழ்ப்பாணத்தில் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 17

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற இரண்டு திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய மூவர் மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாண நகரப் பகுதியில் உள்ள ஹாட்வெயார் விற்பனை நிலையம் ஒன்றை உடைத்து ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான பொருட்களை திருடியமை மற்றும் நாவாந்துறைப் பகுதி ஒன்றில் வீடு உடைத்து பொருட்கள் திருடிய குற்றச்சாட்டில் பொம்மைவெளியைச் சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என யாழ்.மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர்.



கைது செய்யப்பட்டவர்கள் 24 வயதுக்குட்பட்டவர்கள் எனவும் கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து திருடப்பட்ட பொருட்களும் மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

கைது செய்யப்பட்டவர்கள் விசாரணைகளின் பின் நீதிமன்றத்தில் முற்படுத்துவதுக்குரிய நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (அ)

# சமுர்த்தி அலுவலர் என்று கூறி யாழ்ப்பாணத்தில் பண மோசடி

## மக்களை அவதானமாக இருக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 17

சமுர்த்தி உத்தியோகத்தர் எனக் கூறி பண மோசடியில் ஈடுபட்ட நபர் ஊர்காவற்றுறை பிரதேச செயல பிரிவுக்குட்பட்ட பகுதியில் நடமாடுவதாகவும் மக்களை அவதானமாகச் செயற்படுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சமுர்த்தி கொடுப்பனவு பெறும் முதியோருக்கு அரசினால் வழங்கப்படும் 20 ஆயிரம் ரூபா கொடுப்பனவைப் பெறும் முதியவர்களை இலக்கு வைத்து ஒரு குழு பணமோசடியில் ஈடுபட்டு வருகின்றது.

புதிதாக வந்த சமுர்த்தி உத்தியோகத்தர் எனத் தம்மை அறிமுகப்படுத்தி 20,000 ரூபா எம்மிடம் தந்தால் மாதாந்தம் ஒரு தொகை கொடுப்பனவு வழங்குவோம் எனக் கூறி சிலர் முதியவர்களிடம் பணம் பறித்துச் செல்லும் சம்பவங்கள் உடுவில், கோப்பாய், வேலணை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் அண்மை நாட்களில் இடம்பெற்றிருந்த நிலையில் நேற்று முன்தினம் வேலணை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியிலும் மேற்படி சம்பவம் இடம் பெற்றுள்ளது.

குறிந்த சந்தேக நபர் நேற்று ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சரவணைப் பகுதியில் என்.பி.எச்.இசட் 3125 மோட்டார் சைக்கிளில் நடமாடியமை அவதானிக்கப்பட்டுள்ளது.

எனவே குறித்த நபர் தொடர்பில் பாதுகாப்புத் தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதோடு குறித்த நபரை கைது செய்வதற்குரிய நடவடிக்கையை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர்

எனவே பொதுமக்கள் இந்த நபர் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு ஊர்காவற்றுறை பிரதேச செயலக அதிகாரிகள் அறிவித்துள்ளனர். (அ)

# விடைத்தாள்கள் மதிப்பீடு 23 நாட்கள் வரை தாமதம்

கொழும்பு, மார்ச் 17

கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் சுமார் 23 நாட்கள் வரை தாமதமடைந்துள்ளது.

அதற்கான கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டாலும் இதுவரை போதுமான ஆசிரியர்கள் விடைத்தாள் திருத்தும் பணிகளுக்காக இணைந்துகொள்ளாத காரணத்தினால் விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகளை உரிய முறையில் ஆரம்பிக்க முடியாதுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார். (அ)

# வாக்குச் சீட்டுகள் அச்சிடல் இன்னும் ஆரம்பிக்கவில்லை

கொழும்பு, மார்ச் 17

நிதி ஒதுக்கீடுகள் கிடைக்காத காரணத்தினால், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான தபால் மூல வாக்கு சீட்டுகளை அச்சடிக்கும் பணி இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை என தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்க அரச அச்சக அலுவலகத்தின் பிரதானி கங்கானி லியனகே தீர்மானித்துள்ளார்.

இது தொடர்பான அறிவிப்பு எழுத்து மூலம் திணைக்களத்திற்கு வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான தபால் மூல வாக்குகளை அச்சிடுவதற்கு தேவையான நிதியை வழங்குமாறு திறைசேரியிடம் அரசாங்க அச்சக அலுவலகம் பல தடவைகள் கோரிக்கை விடுத்துள்ளது.

எனினும், இந்த கோரிக்கை தொடர்பில் எவ்வித பதிலும் கிடைக்கவில்லை என கங்கானி லியனகே கூறினார். (அ)

## போசாக்கு...

திங்கட்கிழமை பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப் பட்டது. மறுநாள் செவ்வாய்க்கிழமை அதிகாலை அந்தக் குழந்தை உயிரிழந்தது.

குழந்தையின் மரணம் தொடர்பாக அப்பகுதிக்கு பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரி திருமதி அன்ரலா வின்சன்தயான் விசாரணை நடத்தி உடல்கூராய்வு பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

உடல்கூராய்வு பரிசோதனையில் போசாக்கு இன்மையாலேயே குழந்தை உயிரிழந்ததாகத் தெரிய வந்தது. இந்தச் சம்பவம் வடமராட்சிப் பகுதியில் பெரும் அதிர்ச்சியையும் சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

பொருளாதார நெருக்கடியால் கர்ப்பவதி தாய்மார், குழந்தைகளின் போசாக்கு விடயத்தில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதற்கு இந்தச் சம்பவம் ஓர் உதாரணமாகி யுள்ளது என்று சுகாதார தரப்பினர் சுட்டிக்காட்டியுள்ளனர். (ஐ-02)

## வாக்குச்சீட்டு...

வாக்குச்சீட்டுகளை அச்சிடுவதற்கு தேவை யான நிதியை வழங்குமாறு திறைசேரிக்கு கடந்த இரு வாரங்களில் இரு தடவைகள் எழுத்துமூலமாக கோரிக்கை விடுக்கப்பட்டது. ஆனால், இதற்கு சாதகமாக பதில் கிடைக்க வில்லை.

முன்னரும் - மார்ச் 9ஆம் திகதி தேர்தலை நடத்த முடிவு செய்திருந்த போதும் அச்சிடலுக்கு தேவையான நிதி வழங்கப்படவில்லை. ஆகவே, நிதி விடு விப்பு தொடர்பில் திறைசேரி ஓர் உத்தி யோகபூர்வ அறிவிப்பை விடுக்க வேண் டும் என்று அச்சகப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

இதனிடையே, எதிர்வரும் ஏப்ரல் 25ஆம் திகதி உள்ளூராட்சி தேர்தல் நடக்கும் என்று தேர்தல் ஆணைக்குழு அறிவித்தது. இதற்கான தபால் மூல வாக்களிப்பு எதிர்வரும் 28, 29, 30 மற்றும் 31ஆம் திகதிகளில் நடத்தத் திட்டமிடப்பட்டது. மேலும், இதற் கான வாக்குசீட்டு விநியோக பணிகளை வரும் 24ஆம் திகதிக்கு முன்னர் செய் வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது என்ப தும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 13 குறித்து...

பேசுவதை ஜனாதிபதி நிறுத்தியுள்ளார். அண்மையில், யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதி 13ஆம் திருத்தத்தை முழுமையாக நடைப்படுத்துவது குறித்து பேச்சுகளை மேற்கொள்ள வேண்டும் என்று என்னிடம் தெரி வித்தார்.

"எனினும், பௌத்த பிக்குகளின் எதிர்ப்பை தொடர்ந்து அது குறித்த முயற்சிகளை ஜனாதிபதி கைவிட்டுள் ளார். அவர் அது குறித்து பேசுவதில்லை. ஆனால், 13ஆம் திருத்தம் குறித்த தனது திட்டத்தை ஜனாதிபதி கைவிட்டுள் டார் என்று நான் நினைக்கவில்லை. மகா நாயக்க தேரர்களின் எதிர்ப்பால் ஒத்திவைத்துள்ளார் என்றே கருது கிறேன்.

"நான் மகாநாயக்க தேரர்களுக்கு பகிரங்க கடிதமொன்றை எழுதியுள் ளேன் சமீபத்தில் நான் எழுதிய கடிதத்துக்கு அவர்கள் பதிலளிக்க வில்லை. நான் அவர்களை சந்தித்து இது குறித்து தெளிவுபடுத்தத் தயார். அவர்கள் உரிய தெளிவின்றி 13ஆவது திருத்தத்தை எதிர்க்கின்றனர். நாங்கள் உரிய விடயங்களை தெளிவுபடுத்தத் தயார். ஆனால் அவர்கள் எங்களை சந்திக்க தயாரில்லை.

அத்துடன், "13ஆவது திருத்த சட்டத்தின் நடைமுறைப்படுத்துவேன் என ஜனாதிபதி தொடர்ந்தும் தெரிவிக்க வேண்டும்"என்றும் கூறினார். (ஐ)

# கணக்காய்வு அறிக்கை தராத கட்சிகளின் அங்கீகாரம் இரத்து

## தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 17

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி கள் 2021ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட கட்சியின் கணக்கு வெளிப்படுத்தல் அறிக்கையை 14 நாட் களுக்குள் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக் காவிடின் கட்சியின் அங்கீகாரம் நீக்கப் படும் என்று தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தலைமை யில் ஆணைக்குழு நேற்று வியாழக் கிழமை 10 மணியளவில் கூடியது. ஆணைக்குழுவின் உறுப்பினர்களான எஸ். பி. திவாரத்ன, எம். எம். மொஹ மட் மற்றும் கே. பி. பி. பத்திரண ஆகி யோர் கலந்து கொண்டனர்.

1991ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பாராளுமன்ற தேர்தல் சட்டத்தின் 8(4) அத்தியாயத்திற்கு அமைய அங்கீகரிக்கப் பட்ட அரசியல் கட்சிகள் தமது கணக் காய்வு அறிக்கையை தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்க வேண்டும்.

இதற்கமைய 2021 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு அறிக்கையை சமர்ப்பிக்காத அரசியல் கட்சிகளிடம் அறிக்கையை சமர்ப்பிக்குமாறு பலமுறை ஆணைக்குழு வினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய இதுவரை கணக்காய்வு அறிக்கையை சமர்ப்பிக்காத அரசியல் கட்சிகள் இன்று வெள்ளிக்கிழமை யிலிருந்து 14 நாட்களுக்குள் கட்சியின் கணக்காய்வு அறிக்கையை சமப்பிக்கு மாறு பதிவு தபால் ஊடாக அறிவிக்க வேண்டும்.

இந்த அறிவிப்புக்கு அமைய கணக் காய்வு அறிக்கையை சமர்ப்பிக்காத அரசி யல் கட்சிகள் தொடர்பாக பாராளுமன்ற தேர்தல் சட்டத்தின் 9(3) அத்தியாயத் தின் பிரகாரம் அந்தக் கட்சியின் அங்கீ கார உரிமை நீக்கப்படும் என்று ஆணைக் குழு அறிவித்துள்ளது.

# கட்சிகளுடன் செயலர்களை தேர்தல் குழு சந்திக்கின்றது

கொழும்பு, மார்ச் 17

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி செயலாளர்களுடன் பேச்சு நடத்தி உள்ளூராட்சி மன்றத் தேர்தல் குறித்து ஒரு தீர்மானத்தை எடுக்க தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. இது தொடர்பில் எதிர்வரும், 23ஆம் திகதி கட்சிகளின் செயலர்களை சந்திக்கவும் ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது.

நேற்று தேர்தல் ஆணைக்குழு கூடியது. இதிலேயே இந்த முடிவு எடுக் கப்பட்டது.

தேர்தல் நடவடிக்கைகளை மேற் கொள்ள நிதி வழங்குமாறு நிதியமைச் சருக்கு விடுத்த கோரிக்கைக்கு இதுவரை பதில் கிடைக்கப் பெறாமை தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடவ டிக்கைகளுக்கு ஏற்பட்டுள்ள சிக்கல் நிலைக்கு தீர்வு காண அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி செயலாளர்களுடன் கலந்தாலோசித்து ஒரு தீர்மானத்தை எடுக்க ஆணைக்குழு தீர்மானித்தது.

இதற்கமைய எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை அரசியல் கட்சி செயலாளர்களுடன் பேச்சு நடத்தி அதனை தொடர்ந்து உள்ளூராட்சி மன்றத் தேர்தல் குறித்து உத்தியோகப் பூர்வமான தீர்மானத்தை அறிவிக்க ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. (ஐ)

## அரசாங்க...

தொழில் சங்கங்கள் ஒன்றிணைந்து வேலை நிறுத்தப் போராட்டத்தை முன் னெடுத்திருந்தனர். இந்த நிலையில், நேற்று காலை 8 மணி முதல் சகல அரச - அரச அனுசரணை பெற்ற நிறுவனங் கள் அனைத்திலும் வழமைபோன்று பணிகள் இடம்பெற்றன. (ஐ)

# அமைச்சுகளுக்காக அரசுக்குள் போட்டி

## உதய கம்மன்பில்

கொழும்பு, மார்ச் 17

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தினால் பொருளாதார பாதிப்பு தீவிரமடையும் என குறிப்பிடும் ஆளும் தரப்பினர் அமைச்சுகளை பெற்றுக்கொள்ள போட்டி போட்டுக் கொள்கிறார்கள். பொதுஜன பெரமுனவின் முன்னிலை உறுப்பினர்களுக்கு எதிர்வரும் நாட் களில் அமைச்சு பதவிகள் கிடைக் கப்பெறும் என பாராளுமன்ற உறுப் பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தை விமர் சிக்கும் எதிர்க்கட்சிகள் பொருளாதார மீட்சிக்கான மாற்றுத்திட்டங்களை முன்வைக்கவில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிடுவது அடிப்படையற்றது.

கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் பொருளாதார மீட்சிக்கான கொள்கை திட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவிடம் முன்வைத்தோம்,பொதுஜன பெரமுனவின் எதிர்ப்பால் நாங்கள் முன்வைத்த யோசனைகள் புறக்கணிக்கப் பட்டன.

வரவு - செலவுத் திட்டத்தின் பற்றாக் குறையை முகாமைத்துவம் செய்தல்,வரி அதிகரித்தல் உள்ளிட்ட யோசனைகளை சர்வதேச நாணய நிதியம் முன்வைக்குமே தவிர இந்த தொழில்துறையினர் மீது வரி சுமையை அதிகரிக்க வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் ஒருபோதும் குறிப்பிடாது.

அரசாங்கத்தின் முறையற்ற வரிக் கொள் கைக்கு எதிராக மக்கள் போராட் டம் நாளாந்தம் தீவிரமடைந்து செல்கிறது. தொழிற்சங்க போராட்டம் தோல்வி என அரசாங்கம் குறிப்பிடு கிறது. போராட்டத்தில் யார் வெற்றி என்பதை அரசாங்கம் தீர்மானிக்கிறதே தவிர உண்மை பிரச்னைகளுக்கு பொறுப் புடன் தீர்வு காண்பதற்கு எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை -என்றார்.

## தேர்தல்கள்...

சந்திப்பிலேயே அவர் மேற்கண்ட விடயத்தை சுட்டிக்காட்டினார்.

மேலும், ஜனநாயகத்தை உறுதிப் படுத்துவதற்காக ஐக்கிய நாடுகள் சபை மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளுக்குத் தனது பாராட்டுகளையும் எதிர்க்கட்சி தலைவர் இதன் போது தெரிவித்தார். (ஐ)

## வடக்கில்...

சுகாதார அமைச்சு தெரிவித்திருந்தது. எனினும், வடக்கு மாகாண சுகாதார அதிகாரிகளுடனான சந்திப்பின்போது இதற்கான அனுமதி வழங்கப்பட வில்லை என்று தெரிகிறது.

இதனிடையே, சேவை நிரந்தரம் செய்யப்படும் முன்னர் 15 வருடங்கள் தன்னார்வ பணியாளர்களாக நாம் செயல்பட்டோம். 45 வயதை எட்டிய பின்னர் நிரந்தர நியமனம் வழங்கியமை எமது தவறல்ல, அதிகாரிகளின் தவறே என்று சுகாதார ஊழியர்கள் தெரிவித் துள்ளனர்.

நிரந்தர நியமனம் மற்றும் ஓய்வூதிய அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. சேவைக்காலத்தில் சம்பளத்தில் இருந்து சகல கழிப்பனவுகளும் மேற்கொள்ளப் பட்டன. எனவே, ஓய்வூதியம் வழங் கவதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுக்காதது தமக்கு இழைக்கப்படும் பெரும் அநீதி என்றும் அவர்கள் கூறி யுள்ளனர். (ஐ)

## தென்னிலங்கை...

இதனை தமிழ் மக்களின் மூத்த தலைவர் இரா. சம்பந்தனும் கூறியுள்ளார்.

எனவே, தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் புதிய அரசமைப்பு உருவாக் கப்பட்டு தமிழர் பிரச்னைகளுக்கு நிரந் தர தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும் - என்று தென்னிலங்கை செய்தியாளர் ஒரு வரின் கேள்விக்கு பதிலளித்தபோது அநுர குமார இவ்வாறு தெரிவித்தார். (ஐ)

## மத்திய...

தொடர்பில் விளக்கமளிக்கும் வகை யில் நேற்று ஆற்றிய உரையிலேயே மத் திய வங்கியின் ஆளுநர் இவ்வாறு தெரி வித்தார்.

புதிய சட்டத்தின் கீழ் உள்ள முக்கிய நோக்கங்களில் ஒன்று பணக் கட்டுப் பாடு. இதற்காக நாணய கொள்கை சபை செயல்பட்டு வருகிறது. 2020 முதல், மத்திய வங்கியில் கருத்து மாற்றம் ஏற்பட்டது. இதன்படி, வட்டி விகிதத் தையும் மாற்று விகிதத்தையும் கட்டுப் படுத்தாமல் ஒரே மதிப்பில் வைத்திருக் கச் சொன்னார்கள்.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தேவைகளை கட்டுப்படுத்த மத்திய வங்கி வைத்திருக்கும் இரண்டு கருவிகள் இவை. இந்த இரண்டையும் கட்டுப் படுத்தாமல், பொருளாதார வளர்ச்சி விகிதத்தை நிலைப்படுத்த முடியாது - என்று கூறினார்.

## தொழில்...

செயலாளர் கடிதம் மூலம் தொழில் சங்கங்களுக்கு உறுதி அளித்துள்ளார்.

அண்மையில் அறிவிக்கப்பட்ட வரியை உடனடியாக திருத்த வேண்டும் என்று கோரி 47 பிரதான தொழில் சங்கங்கள் நேற்று முன்தினம் பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# பாதுகாப்பு செயலராக மகேஷ் சேனாநாயக்க?



கொழும்பு, மார்ச் 17

முன்னாள் இராணுவத் தளபதி மகேஷ் சேனாநாயக்கவுக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதவி வழங்குவதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக இடம்பெற்று வருவதாகத் தெரியவருகின்றது.

பாதுகாப்புச் செயலாளர் பதவியை ஏற்குமாறு ஆளுங்கட்சியில் உள்ள முக்கிய பிரமுகர்கள் சிலர், மகேஷ் சேனாநாயக்கவை தொடர்பு கொண்டு அழைப்பு விடுத்திருந்த நிலையில், உயர்மட்ட அரச அதிகாரிகள் அவருடன் பேச்சு நடத்தியுள்ளனர் எனவும் கூறப்படுகின்றது.

"பாதுகாப்புத் துறையில் சிற்சில மாற்றங்கள் இடம்பெற வேண்டும். அவ்வாறு மாற்றங்கள் இடம்பெற்ற பின்னர் தகுதியானவர்கள் அந்தந்த இடங்களுக்கு நியமிக்கப்பட வேண்டும். அப்போதுதான் சிஸ்டம் சேன்ஜ் இடம்பெற்று, சிறந்த சேவை வழங்கப்படும். இது நடந்தால் நிச்சயம் நான் பதவியேற்பேன்." என்று அந்த அரச அதிகாரிகளிடம், மகேஷ் சேனாநாயக்க குறிப்பிட்டுள்ளார் எனத் தெரியவருகிறது.

தற்போதைய பாதுகாப்புச் செயலாளருக்கு வெளிநாட்டு தூதுவர் பதவியொன்று வழங்கப்படலாம் என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ)

# நலன்புரி நன்மைகள் பெறுவதற்கு மார்ச் 31 ஆம் திகதிக்குமுன் பதிவு

கொழும்பு, மார்ச் 17

பொது மக்கள் நலன்புரி நலன்களைப் பெறுவதற்கு மார்ச் 31ஆம் திகதிக்கு முன்னர் சரியான தகவல்களை வழங்குமாறு நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நலன்புரி நலன்களைப் பெறுவதற்காக தாக்கல் செய்யப்பட்ட 3.7 மில்லியன் விண்ணப்பங்களை மதிப்பீடு செய்யும் நடவடிக்கையில் தற்போது ஈடுபட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க கூறினார்.

நாடு முழுவதிலும் உள்ள 334 பிரதேச செயலகங்களில் 1.1 மில்லியன் விண்ணப்பங்களை மதிப்பீடு செய்து தற்போது நடைபெற்று வரும் தகவல் கணக்கெடுப்பு நிறைவடைந்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

நலத்திட்ட உதவிகள் வழங்கும் திட்டத்துக்கு தகுதியான நபர்கள் மற்றும் குடும்பங்களை அடையாளம் காண நடத்தப்பட்ட கணக்கெடுப்பு மார்ச் 31 ஆம் திகதி முடிவடைகிறது.

காலக்கெடுவுக்கு முன்னர் தகவல்களை வழங்காமல் தவிர்ப்பது நன்மைகளை இழக்க நேரிடும் என இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

எனவே, அனைத்து விண்ணப்பதாரர்களும் தகவல் கணக்கெடுப்பு நடத்தும் கணக்கெடுப்பு அதிகாரிகளிடம் துல்லியமான மற்றும் சரியான நேரத்தில் தரவுகளை சமர்ப்பிக்கவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

# நாட்டில் இடி அமீன் ஆட்சி நிலவுவது போன்ற உணர்வு

## கூறுகின்றார் ரவி குமுதேஸ்



கொழும்பு, மார்ச் 17

நாட்டில் இடி அமீன் ஆட்சி நிலவுவது போன்ற உணர்வு தோன்றுவதாக சுகாதார ஊழியர்கள் சம்மேளனத்தின் ஒருங்கமைப்பாளர் ரவி குமுதேஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துரைக்கும்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாங்கள் இன்று காலை அனைத்து மருத்துவமனை பணியாளர்கள், அரச மற்றும் அரச அனுசரணையுடன் இயங்கும் மத்திய நிலையத்துக்கு உரித்தான தொழிற்சங்கங்கள் அனைத்தையும் சேவைக்கு அழைத்துள்ளோம்.

குறிப்பாக நாங்கள் அரசாங்கத்துக்கு ஒரு சமிஞ்ஞையை வழங்குவதற்கே முயற்சி செய்தோம்.

24 மணித்தியால போராட்டமாகவே நாங்கள் அதனை முன்னெடுத்தோம். ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்துக்கு எச்சரிக்கையை விடுக்கும் முகமாக இந்த அடையாள பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்பட்டது.

அத்துடன் ஓய்வு பெற்ற சில தொழிற்சங்கத் தலைவர்களின் பிழையான கருத்து வெளியீடுகளை சரிப்படுத்தும் நோக்கில் நாங்கள் எங்களின் விளக்கத்தை வழங்கியுள்ளோம்.

இந்தநிலையில் இன்றைய தினத்தில்(நேற்று) அனைத்து தொழிற்சங்கங்களும் தமது பணிகளை ஆரம்பித்துள்ளன.

நாட்டில் பணி புரியும் வர்த்தகத்தினரை அடக்க முயற்சிக்கும் தரப்பினருக்கு எங்களின் எதிர்ப்பையும், எச்சரிக்கையையும் விடுக்கும் முகமாக மாத்திரமே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதே அன்றி பொது மக்களை இன்னலுக்கு உட்படுத்தும் நோக்கம் இல்லை.

அரசாங்கம் மேற்கொள்ளும் செயற்பாடுகளுக்கு இந்த நாட்டில் உள்ள மக்கள் முழுமையாக ஆதரவு வழங்குவதாக நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். அரசாங்கத்தில் உள்ளவர்கள் தங்களின் பேச்சில் அதனை உறுதிப்படுத்த முனைகிறார்கள்.

அதுமட்டுமன்றி ஒரு சிலர் மிகைப்படுத்திக் கூறுகிறார்கள். ஜனாதிபதி ஊடகப் பிரிவு இயங்கும் விதம் உண்மையில் வெட்கக் கேடாக இருக்கின்றது.

ஆனால் பொதுமக்கள் உண்மை நிலைமையை தற்போது உணர்ந்துவிட்டார்கள். இடி அமீனின் ஆட்சியில் இடம்பெற்றது போன்ற அடக்கும் முறைகள் தற்போது இடம்பெறுகின்றன - என்றார். (அ)

# சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக புத்தூரில் நாளை போராட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 17

சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் ஏற்பாட்டில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியில் தீப்பந்தப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

மின்சாரக் கட்டண உயர்வைக் கைவிடு!, உணவு எரிபொருள் விலைகளைக் குறை!, மக்களைப் பட்டினிச் சாவுக்குள் தள்ளாதே!, சூழ்ச்சிகளால் உள்ளூராட்சித் தேர்தலை நிறுத்தாதே!, வரிகளைச் சுமத்தி மக்களை உறிஞ்சாதே!, வட பகுதிக் கடல் வளத்தை இந்தியாவிற்கு விற்காதே!, இந்திய முதலாளிகளின் சுரண்டலுக்கு எமது மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பலியிடாதே!, நாட்டின் வளங்களை வல்லரசுகளுக்கு வழங்காதே! ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து இந்த போராட்டம் இடம்பெறவுள்ளது.

இப்போராட்டத்தில் அனைத்து உழைக்கும் மக்களையும் பங்கேற்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

# நீதிபதிகளின் சம்பள வரிக்கு எதிரான மனுவை விசாரிக்கத் திகதி நிர்ணயம்

கொழும்பு, மார்ச் 17

நீதிபதிகளின் சம்பளத்துக்கு வரி விதிக்கும் முடிவை ரத்து செய்ய உத்தரவிடக் கோரி ஐந்து நீதிபதிகள் அடங்கிய அமர்வு முன் தாக்கல் செய்யப்பட்ட இரண்டு ரிட் மனுக்களை விசாரிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் முடிவு செய்தது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் ஏ.மரிக்கார் ஆகியோர் அடங்கிய அமர்வு இந்த தீர்ப்பை வழங்கியுள்ளது.

அப்போது, மனுவை எதிர்வரும் 22ஆம் திகதி விசாரிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

மேலும், நீதிபதிகளின் சம்பளத்தில் இருந்து உரிய வரியை வசூலிக்க தடை விதித்து விதிக்கப்பட்ட தடை உத்தரவை அன்றைய தினம் வரை நீட்டித்து உத்தரவிட்டுள்ளது.

இலங்கை உயர் நீதிமன்ற நீதிபதிகள் சங்கம் மற்றும் இலங்கை நீதித்துறை அதிகாரிகள் சங்கம் ஆகியவை உரிய மனுக்களை சமர்ப்பித்திருந்தன. (அ)

# உரக்கப்பல் வந்தது!

கொழும்பு, மார்ச் 17

நெற்செய்கைக்குத் தேவையான ரி.எஸ்.பி. உரம் ஏற்றிக்கொண்டு எம்.வி. இன்ஸ் பசுபிக் என்ற கப்பல் நேற்று அதிகாலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

அந்தக் கப்பலில் இருந்து 36,000 மெற்றிக் தொன் உரம் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இதேபோன்ற மற்றொரு உரக் கப்பல் இலங்கை வர உள்ளது.

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு மற்றும் யு.எஸ். எயிட் நிறுவனங்களின் பங்களிப்புடன் இந்த உரம் வழங்கப்பட்டுள்ளது.

ஒரு ஹெக்ரேயருக்கு 55 கிலோ உரம் வழங்கப்படும்.

# ரயிலுடன் மோதிய கார் காலியில் இருவர் மரணம்!

கொழும்பு, மார்ச் 17

காலி - கொக்கலை உரக்களஞ்சியத்துக்கு அருகில் அமைந்துள்ள ரயில் கடவையில் இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று முற்பகல் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் சம்பவத்தில் மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

கார் ஒன்று ரயிலுடன் மோதியமையினாலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

காயமடைந்தவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ)

# நாணய நிதிய நாணய சபையின் அங்கீகாரம் 20 ஆம் திகதி கிட்டும்?



கொழும்பு, மார்ச் 17

சர்வதேச நாணயநிதியத்தின் நாணயச் சபையின் அங்கீகாரம் எதிர்வரும் 20ஆம் திகதி கிடைக்கும் என நம்பிக்கை கொண்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் செகான் சேமசிங்க தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவி இலங்கைக்கு கிடைத்ததும் அடுத்த நான்கு வருடங்களில் இலங்கைக்கு 7 பில்லியன் டொலர் கிடைக்கலாம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த ஏழு மில்லியன் டொலர் என்பது தாங்கள் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ள நிதியமைப்புகள் மற்றும் இரு தரப்பு பேச்சுவார்த்தைகள் மூலம் கிடைக்கப்போகின்றது எனவும் அவர் கூறினார். (அ)

# கடல் மணலை பொதுமக்களுக்கு மலிவு விலையில் விற்க தீர்மானம்

கொழும்பு, மார்ச் 17

தேவையான தரத்தில் தயாரிக்கப்பட்ட கடல் மணலை பொதுமக்களுக்கு மலிவு விலையில் விற்பனை செய்ய இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய, இவ்வருடம் இரண்டு மில்லியன் கனமீற்றர் கடல் மணலை பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படுவதாக கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் பணிப்புரைக்கு அமைவாக இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

கழுவி தேவையான தரத்தில் தயாரிக்கப்பட்ட கடல் மணலின் கன சதுரத்தை பொதுமக்களுக்கு மலிவு விலையில் விற்பனை செய்யுமாறு இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திற்கு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

முத்துராஜவெல கடற்கரையிலிருந்து நீர்கொழும்பு வரை 10-15 கிலோமீற்றர் தூரத்தில் கடலில் இருந்து நிலத்திற்கு கடல் மணல் அள்ளப்படும்.

இந்த கடல் மணல் அகழ்வுத் திட்டத்தினால் கொழும்பிலிருந்து நீர்கொழும்பு வரையான கடற்பரப்பில் வாழும் மீனவர்கள் பாதிக்கப்படுவார்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 17.03.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.